Registered as a NewsPaper

- 8 NOV 2004

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-23 | 08-11-2004 | திங்கட்கிழமை | ஓசை -264

கணேசா நகையுகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-10705)



★பாதுகாப்பு ★பலாலி விமானத்தள விஸ்தரிப்பு

# இந்திய-சிறிலங்கா உடன்பாடுகள் உரிய காலத்தில் கைச்சாத்திடப்படும்!

## சந்திரிகாவின் விஜயத்தின் பின்னரான கூட்டறிக்கை

**இலங்கை-இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை மற்றும் பலாலி விமானத்தளத்தை புனரமைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை என்பவற்றை இரு அரசுகளும் பொருத்தமான திகதியில் கைச்சாத்திட தீர்மானித்துள்ளதாகக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் பொதுவான அரசியல் பாதுகாப்பு பொருளாதார மற்றும் சமூக கலாச்சார விடயங்கள் தொடர்பாக சனாதிபதி தனது விஜயத்தின் போது இந்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சர்வதேச பிரச்சினைகளின் போது பொது உடன்பாட்டுடன் செயற்படுவதற்கும் இரு நாட்டுத் தலைவர்களும் தீர்மானித்துள்ளனர். இந்திய இலங்கை சுதந்திர வர்த்தகர்களின் கீழ் இரு நாடுகளுக்கும் பொருளாதார ரீதியில் நன்மை பயக்கும் இணக்கப்பாடுகளும் காணப்பட்டுள்ளன. இலங்கையில் கிராமிய அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல், வீதிகளை நிர்மாணித்தல், மீன்பிடி தொழிலில் ஈடுபடுவோர்கள் சம்பந்தமாக இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தல், கலாச்சார உறவுகளை மேம்படுத்தல் போன்ற உடன்பாடுகளும் இவ் விஜயத்தின் போது செய்து கொள்ளப்பட்டுள்ளமையும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய மீனவரின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக மன்னார் மீனவர்கள் போராட்டம்!

பேசாலை தலை மன்னார் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் அத்து மீறிப் பிரவேசித்து மீன் பிடித்துக் கொண்டிருந்த 600 இற்கும் மேற்பட்ட இந்திய ரோலர்களின் வருகையை எதிர்த்து பேசாலையில் சகல மக்களினதும் ஒத்துழைப்புடன் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாக இடம் பெற்றது.

பேசாலை பிரதான வீதி, வங்காலைவீதி, சிறுத்தோப்பு வீதி, கட்டாஸ்பத்திரி வீதி போன்ற இடங்களில் இந்த மறியல் போராட்டம் இடம் பெற்றுள்ளது. 300 இற்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் படகுகளை வைத்து போராட்டம் நடை பெற்றுவருவதால் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இதற்கென எத்தனையோ வழிமுறைகள், முடிவுகள், தீர்மானங்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் செய்த போதிலும் இந்த விடையத்தில் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இந் நிலையில் மீண்டும் பெருமளவான இந்திய ரோலர்கள் வந்து எமது செல்வத்தை அள்ளுவதை எம்மால் பொறுக்க முடியாது. (16ஆம் பக்கம் பார்க்க)

- உயிரிழந்த இந். அமைதிப்படைக்கு -

## மணிமண்டபம் அமைக்க சிறிலங்கா அரசாங்கம் முயற்சி

ராஜீவ்- ஜே.ஆர். ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு அமைதிப் படையாக வந்து கொல்லப்பட்ட 1700இற்கும் மேற்பட்ட இந்தியப் படையினரை சிறிலங்கா அரசாங்கம் கௌரவிக்கவுள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் கைச்சாத்தான இவ் ஒப்பந்தத்திற்கு அமைய,1987ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்ட யுத்தத்தில் பாரிய உயிரிழப்புக்களை சந்தித் (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்.படகுகளின் ஊடுருவலைத் தடுக்கும் பொறுப்பை புலிகளிடம் ஒப்படையுங்கள்!

– போராட்டம் நடத்தும் மன்னார் மீனவர் கோரிக்கை

எமது தாயகக் கடற்பரப்பில் இந்தியப் படகுகள் அத்துமீறி ஊடுருவுவதைத் தடுக்கும் பொறுப்பை எமது விடுதலைப்புலிகளிடம் ஒப்படையுங்கள். அவர்கள் அதனை உடனடியாகச் செய்து முடிப்பார்கள். எம்மைப் பொறுத்த வரை புலிகளே எமக்கு கை கொடுப்பார்கள். எமது ஏகதலைவர் பிரபாகரனே என மன்னார் மீனவர்கள் கூறியுள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்து மீறலுக்கு எதிராக மன்னாரில் நடைபெற்று வரும் போராட்டம் தொடர்பாக நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

தற்சமயம் பேசாலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்திய மீனவர் அத்து மீறல் சம்பந்தமாக எதிர்ப்புப் போராட்டம் மிகவும் உச்ச நிலைக்கு வந்துள்ளது.இதனை ஒட்டி நேற்றுப் பிற்பகல் 12.00 மணியளவில் பேசாலையில் ஓர் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது. இதில் சிறிலங்கா வடபிராந்திய கட்டளைத் தளபதி, வவுனியா பிரதிப்பொலிஸ்மா அதிபர் மன்னார் ஆயர் ராயப்பு யோசப், மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர், இனியவன, (16ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் பசீலன் நினைவு நாள் இன்று அனுஷ்டிக்க ஏற்பாடு

(முள்ளியவளை)

இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலின் போது எறிகணைத் தாக்குதலில் தலையில் காயப்பட்டு 1987/11/08 அன்று வீரச்சாவடைந்த வன்னி மாவட்ட தாக்குதல் பொறுப்பாளரான மேஜர் பசீலனின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வும், மேஜர் பசீலன் ஞாபகார்த்த மாலை நேரக்கல்வி நிலைய கட்டடத்திறப்பு விழாவும் இன்று மு.ப.10.30மணிக்கு முள்ளியவளை நாவற்காடு கிராமத்தில் நடைபெறவுள்ளது பிரதேச ஊரக வளர்ச்சி பணிப்பொறுப்பாளர் வை.குமரனின் ஒழுங்குபடுத்தலில் பிரதேச மக்களினால் சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினை தொடர்பில் ரணில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை

- மல்வத்த மகாநாயக்கர் குற்றச்சாட்டு

நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பில் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படவில்லை என மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறி சுமங்கலதேரர் தெரிவித்துள்ளார். ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான றோகித போகல்லாகம நேற்று முன்தினம் இவரைச் சந்தித்தபோது தேசிய நல்லிணக்க சபையில் ஐக்கிய தேசியக்கட்சி கட்டாயமாகப் பங்கு கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## தீ விபத்தில் காயமடைந்தவர் யாழ்.மருத்துவமனையில் மரணம்

வியாபார நிலையத்தில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற தீ விபத்தில் காயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தொம்மப்பிள்ளை அன்ரன் ஜெயராஜ் (வயது-25) என்பவரே மரணமானவராவார்.

பெற்றோல் உட்பட பலசரக்கு வாணிபம் செய்யும் வியாபார நிலையத்தில் சம்பவ தினம் இரவு 8மணியளவில் கடையைப் பூட்டுவதற்காக பொருட்களைக் கடைக்குள் எடுத்துவைக்கும் போது பெற்றோல் தவறுதலாக வீழ்ந்ததாகவும் அது நிலத்தில் சிதறியதாகவும், அருகிலிருந்த பெற்றோல் மாக்ஸ்சில்பட்டு மேற்படி நபர் மீதும், கடை மீதும் தீப் பற்றிக்கொண்டதாகவும் தெரிவிக்கபடுகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### சட்டக்கல்லூரி கட்டடத் திறப்பு விழா

சட்டக் கல்லூரி புதிய கட்டடத் திறப்பு விழா கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. வரும் 10ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இத் திறப்புவிழா நடைபெறவுள்ளது.

## புலிகளின் இ.த.அ சபை வரைபை சிங்கள தேசம் தவறாக பிரசாரம் செய்கிறது

– மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

தமிழீழ விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக் கால தன்னாட்சி அதிகார சபை வரைபை சிங்கள தேசம் பிழையான வழியில் பிரச்சாரம் செய்து வருகிறதென மட்டு-அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி வர்த்தகர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஆயுதம் என்பதை தூக்க வேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள தேசத்தால் எமக்கு உருவாக்கப்பட்டது. இன்று சிங்களப் பேரினவாதம் இதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். நாங்கள் ஆயுதத்தின் மீது ஆசை கொண்டவர்களோ, யுத்தத்தின் மீது மோகம் கொண்டவர்களோ அல்ல. எங்களுடைய உரிமையைப் பெறுவதற்காக எங்களுடைய தேசம் பாதுகாக்கப்படுவதற்காக எங்களைத் தற்காத்துக் கொள்வதறகாக ஆயுதப் போராட்டத்தை தேசியத் தலைவர் முன்னெடுத்து நடத்தி வந்திருக்கிறார். எனவே நாங்கள் ஆயுதம் ரீதியாக பலம் பெற்றிருக்கின்றோம். அதனால் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. பேச்சுவார்த்தையிலே பல சிக்கல்களும், பல இழுபறிகளும் தொடர்ந்து

(16 [illegible]



புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் மாலை சுமார் மூன்று மணிநேரமாகப் பெய்த கடும் மழை காரணமாக புதுக்குடியிருப்பு நகர வர்த்தக நிலையங்களைச் சூழ வெள்ளம் நிற்பதையும், முல்லை கல்வி வலயம் வெள்ளத்தால் சூழப்பட்டிருப்பதையும், புதுக்குடியிருப்பு நகரப்பகுதியை அண்டிய பகுதி வீதிகள் வெள்ளக் காடாகக் காட்சியளிப்பதையும் படங்களில் காணலாம். [படப்பிடிப்பு - தவரட்ணம்]

## வரிவிளம்பரம்

### முக்கிய அறிவித்தல்

மாவீரர் தினத்தை முன்னிட்டு இன்றிலிருந்து இளம்பிறை தையலகத்தினர் றவுசருக்கு 175 ரூபா, சேட்75ரூபா தையல் கூலியாக பெற்றுதைத்துக் கொடுக்கவுள்ளனர் என்பதனை தெரியப்படுத்தியுள்ளனர். உரிமையாளர், சதீஸ். 5257)

### தவறிவிட்டது

கிளிநொச்சி கனகபுரம் 2ஆம் பண்ணை இலக்கம் 13இல் வசித்து வரும் பொன்னையா சின்னராசா ஆகிய எனது வளர்ப்பு நாய் (பெமேரியன்) மண்ணிறம் வியாழக்கிழமையிலிருந்து காணாமல் போயுள்ளது. அதனைக் கண்டவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். தகவல்:பொ.சின்னராசா. (5256)

### விற்பனைக்கு உண்டு

நல்ல இனப் பசுக்கள், நாம்பன் மாடுகள் விற்பனைக்கு உண்டு. [illegible] 226/2திருவையாறு. (5251)

### தவறிவிட்டது

கத்தரின்மேரி இரத்தினமலர் செல்வநாதர் என்பவரின் தே.அட்டையுடன், முக்கிய ஆவணங்கள் அடங்கியகைப்பை கிளிநொச்சி கந்தசாமி கோவிலடிக்கும் பேருந்து நிலையத்திற்கும் இடையில் பஸ்சில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது புலிகளின்குரல் பணிமனையிலோ ஒப்படைக்கவும். தகவல்:- க.செல்வநாதர். (5255)

## கிளி. மாவட்டக்குளங்களில் நீர் மட்டம் உயர்வு

(அலுவலக செய்தியாளர்)

தற்போதுபெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டக் குளங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளதுடன் சில குளங்களில் நீர் நிரம்பி வான் பாய்வதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக கல்மடுக்குளம், பிரமந்தனாறுக்குளம், கனகாம்பிகைக் குளம் ஆகிய குளங்களில் நீர் நிறைந்ததன் விளைவாக வான்பாயத் தொடங்கியுள்ளன. கல்மடுக்குளத்திலிருந்து 9அங்குல நீரும், பிரமந்தனாற்றுக்குளத்திலிருந்து 9அங்குல நீரும், கனகாம்பிகைக் குளத்திலிருந்து 4அங்குல நீரும் வான்பாய்வதாகத் தெரியவந்துள்ளது.

நேற்று பகல் 12.00 மணிவரை கிளி.மாவட்டக் குளங்களில் உள்ள நீரின் அளவுகள் பின்வருமாறு;

இரணைமடு 25'11" புதுமுறிப்பு 14'1" அக்கராயன் குளம்21'6", கல் மடுக்குளம் 21'9", பிரமந்தனாற்றுக்குளம் 12'9", வன்னேரிக்குளம் 8'6", கனகாம்பிகைக்குளம் 10'4" (சோ)

## முச்சக்கர வண்டி ஓட்டுனர்களுக்கு போக்குவரத்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு


(அலுவலக செய்தியாளர்)

வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாக தமிழீழ காவல்துறையினர் பல்வேறு தரப்பினருக்கும் விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலை 10மணி தொடக்கம் 11.30 வரை கிளிநொச்சியில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலைய மாணவர்களுக்கு தமிழீழக் காவல்துறையின் வாகனப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரின் தலைமையில் வீதி விபத்தை தடுக்கும் முகமான கருத்துரைகள் வழங்கப்பட்டதோடு நேற்றுக் கிளிநொச்சி முச்சக்கர வண்டி ஓட்டுனர்களுக்கான வீதி விபத்துப் பற்றிய கருத்துக்கள் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதில் 60 இற்கும் மேற்பட்ட முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் கலந்து கொண்டனர். (ச,தீ)

## மாவீரர் நாளை முன்னிட்டு திறந்த முறை விவாதப்போட்டி

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை 2004 மாவீரர் நாளை முன்னிட்டு திறந்த முறையில் விவாத சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றவிரும்பும் விவாதக் குழுக்கள் 12-11-2004 இற்கு முன்னர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நேரடியாக தமது விபரங்களைப் பதிவு செய்துகொள்ளமுடியும். இச்சுற்றுப் போட்டியில் ஓர் அணியில் மூவர் வாதிட அனுமதிக்கப்படுவதோடு, தமிழீழ போராட்டத்தை மையமாக வைத்து தலைப்புக்கள் வழங்கப்படும். மேலதிக விபரங்களை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பெற்றுக்கொள்ளமுடியும். நடுவர் தீர்ப்பே இறுதியானது. (36)

# அரபாத்தின் நோயைக் கண்டறிய வைத்தியர் போராட்டம் உடலில் நஞ்சூட்டப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்

(பரிஸ்)

**பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்தின் உடல் நிலை மோசமடைந்தமைக்கான காரணத்தை கண்டறிவதில் பிரான்ஸ் வைத்தியர்கள் தொடர்ந்தும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.**

அரபாத் கோமா நிலையில் இருப்பதாக வெளியான செய்திகளை அவரது சிரேஷ்ட உதவியாளர் மறுத்துள்ளார்.

இதேவேளை அரபாத்திற்கு இரத்தப்புற்றுநோய் ஏற்பட்டிருப்பதாக வெளியான தகவல்களை அவரிற்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள் மறுத்துள்ளனர். ஆயினும் அவரது உடல்நிலை தொடர்ந்து மோசமடையக் காரணம் என்ன என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. சில வேளை அரபாத்திற்கு நஞ்சூட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளதென அரபாத்தின் அலுவலகத்தில் பணியாற்றுகின்ற சிரேஷ்ட அதிகாரி தைம்அப்துல் ரகீம் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். பலஸ்தீன தகவல்களிற்கமைய அரபாத்தை கொல்வதற்கு 13 தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று அவரிற்கு நஞ்சூட்ட எடுக்கப்பட்ட முயற்சிகளாகும். இவ் அனைத்து முயற்சிகளிலிருந்தும் அவர் உயிர் தப்பியுள்ளாரென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிந்திக்கிடைத்த செய்திகளின் படி பலஸ்தீன அதிபர் அரபாத்தின் உடல் நிலையில் எதுவித முன்னேற்றமும் இல்லை என பலஸ்தீன அதிகாரி ஒருவர் அறிவித்திருக்கிறார்.

## ஏவுகணைப் பரீட்சிப்பு

இந்தியா குறுகிய தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணை ஒன்றை பரீட்சித்துள்ளது.

நேற்றையதினம் பரீட்சிக்கப்பட்ட இவ் ஏவுகணை 250 கி.மீ தூரம் சென்று தாக்கக்கூடியது எனத் தெரிகிறது. இவ் ஏவுகணை ஒரிசா மாநிலத்திற்கு அப்பால் கடல் கப்பல் ஒன்றில் வைத்து ஏவப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருக்கிறது.

# ஈராக்கில் அவசரகால நிலை இடைக்கால அரசால் பிரகடனம்

(பாக்தாத்)

ஈராக் இடைக்கால அரசாங்கம் ஈராக்கில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி உள்ளது.

இராணுவ சட்டம் பிரமாணங்களுக்கு அமைவாக இவ்அவசர கால பிரகடனம் 60 நாட்களுக்குத் தொடரும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது இப்பிரகடனம் குர்தீஸ் மக்கள் வாழும் பகுதிகள் தவிர்ந்த ஈராக்கின் எல்லாப் பகுதிகளிலும் அமுலுக்கு வருவதாக இடைக்கால அரசு அறிவித்திருக்கின்றது. இது இவ் வாறிருக்க மத்திய பாக்தாத்தில் நேற்றுப் பாரிய குண்டு ஒன்று வெடித்துள்ளதாக ரொயிட்டர் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.



# பிரிட்டனில் அதிவேக ரயில் விபத்து ஆறு பேர் பலி; ஏழு பேர் படுகாயம்!

(லண்டன்)

பிரிட்டனில் அதிவேக ரயில் ஒன்று வீதிக் கடவையை கடக்க முயன்ற கார் ஒன்றுடன் மோதியதில் ஆறு பேர் உயிரிழந்ததுடன் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

இங்கிலாந்தின் சில பகுதிகளின் பாதுகாப்பற்ற நிலமை குறித்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் வெலிங்டன் நகரில் இருந்து பிறைமோர் நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் ஒன்று பாதுகாப்பற்ற ரயில் கடவையில் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்றுடன் மோதிய சம்பவத்தில் ஆறு பேர் உயிரிழந்ததுடன், எழு பேர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்தில் ரயிலின் எட்டுப் பெட்டிகள் தண்டவாளத்திலிருந்தும் விலகி தடம் புரண்டன.

300 பயணிகளுடன் வந்த இந்த ரயில் தடம்புரண்டதால் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளோரை மீட்கும் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

# ஐவரி கோஸ்டில் தீவிரமடையும் தாக்குதல்கள் பிரான்ஸ் படையினருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

(அபுஜா)

ஐவரி கோஸ்டின் அபுஜா நகரை பிரான்ஸ் இராணுவத்தினர் கைப்பற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டுப் பொது மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பிரான்ஸ் படையினருக்கும், பொது மக்களுக்கும் இடையில் மோதல்களும் ஏற்பட்டன.

2003 ஆண்டு சனவரி மாதத்தில் ஐவரி ள கோட் அரசாங்கத்துக்கும் பிரிவினை வாத கெரில்லாக்களுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

ஒன்பது மாதங்களாக நீடித்த இந்த சமாதான உடன்படிக்கை செப்ரெம்பர் 29 ஆம் திகதி வரை கேள்விக்குறியானது. அந் நாட்டில் குடிவரவு சட்டம் மாற்றியமைக்கப்படும் வரை தாம் ஆயுதங் களை களையப்போவதில்லை என ஐவரி கோஸ்ட் பிரிவினை வாதிகள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து எழுந்த முறுகல்நிலை காரணமாக ஆட்சியில் அங்கம் வகித்த ஐவரி கோஸ்ட் பிரிவினை வாத கெரில்லாக்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறினர். கடந்த 4 ஆம் திகதி ஐவரிஸ் கோஸ்டின் வடபகுதியில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி மீது அரச படைகள் வான்வெளித் தாக்குதலை நடத்தின.

ஐவரி கோஸ்டில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள பிரான்ஸ் படையினரில் இருவர் இத் தாக்குதலில் உயிரிழந்தனர்.

இதனை அடுத்து பிரான்ஸ் படையினர் நடத்திய பதில் தாக்குதலில் ஐவரி கோஸ்ட் அரசின் இரண்டு யுத்த விமானங்கள் அழிக்கப்பட்டன

தலைநகர் அபுஜாவின் சில பகுதிகளிலும் பிரான்ஸ் படையினர் தமது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

# இடைவிடாத விமானத் தாக்குதல்களுக்கு ஆபிரிக்க ஒன்றியம் கண்டனம்

ஐவரிகோஷ்ட் அரச படையினர், போராளிகள் செறிந்து வாழும் நிலைகள் மீது தொடர்ச்சியாக நடத்தும் விமானக் குண்டுவீச்சுகளை ஆபிரிக்க ஒன்றியம் கண்டித்துள்ளது.

பல மாதங்களாக அமைதி முறையில் நிலவிய யுத்த நிறுத்தம் தற்சமயம் மீறப்பட்டு யுத்தங்கள் ஆரம்பமாகியதையிட்டு ஆபிரிக்க ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது.

இதேவேளை நைஜீரியாவில் நடைபெறுகின்ற ஆபிரிக்க ஒன்றியத்திற்கான தலைவர்களுக்கு இடையிலான கூட்டத்திலே ஐவரி கோஷ்டின் அரச பிரதிநிதிகளோடு அல்லது ஐவரி கோஷ்டின் 50 சதவீதமான நிலப்பரப்பை கட்டுப்பாட்டில் வைத்துள்ள போராளிகளே கலந்து கொள்ளவில்லை.

அதேவேளை ஐவரிகோஷ்டின் விமானப்படையினரின் விமானங்கள் நடத்திய தாக்குதல் காரணமாக 09 பிரஞ் அமைதி காக்கும் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை போராளிகளுக்கெதிராக குண்டுவீச்சு நடத்திய ஐவரிகோஷ்டின் 2 யுத்த விமானங்களை அமைதி காக்கும் படையினர் அழித்துள்ளார்கள்.

# அமெ. ஒழுக்க உணர்வு சிந்தனையே புஷ்ஷின் வெற்றிக்குக் காரணமாம்

அமெரிக்க சனாதிபதியான ஜோர்ஜ் புஷ்மீண்டும் தெரிவு செய்யப்பட்டமைக்கு முக்கிய காரணம் அமெரிக்க மக்களின் ஒழுக்க உயர்வுதான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரைவிட ஒழுக்க உயர்வு, அறநெறிகள் ஆகியவற்றிற்கு கிறிஸ்தவ மக்கள் அதிக முக்கியத்துவம் தந்தமையே அவரின் வெற்றிக்குக் காரணம் என ஆய்வுகள் கூறுகின்றன. புஷ் வெல்வதற்கு பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் மேற்கொள்வதில் அவர் காட்டும் அக்கறை, அவரது பொருளாதாரக் கொள்கைகள், ஈராக் தொடர்பான அவரது நிலைப்பாடு ஆகியனவும் பிரதான காரணங்கள் ஆனால் ஒழுக்க அறநெறி மட்டுமே அதிக முக்கிய காரணியாக கருதப்படுகிறது. சமூக மற்றும் மத ரீதியான கண்ணோட்டத்தில் ஒருபால் திருமணம், துப்பாக்கி வைத்திருக்கும் உரிமை, கருக்கலைப்பு ஆகியன வாக்காளர்களால் நோக்கப்பட்டுள்ளன. புஷ்ஷிற்கு ஆதரவு தெரிவித்தவர்கள் அவரது தெளிவான நோக்கம், தலைமைத்துவம் மற்றும் மத நம்பிக்கையை மதித்துள்ளனர். புஷ் ஒருபால் திருமணத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய் தார். இவரை எதிர்த்துப் போட்டி யிட்ட ஹெரி இதனை ஆதரித்தார். இருவரும் முரண்பட்ட நிலைப் பாடுகளைக் கொண்டிருந்தனர். புஷ் கடும் கருக்கலைப்பை ஆதரிக்கவில்லை.

புஷ்ஷிற்கு வாக்களித்தவர்களில் 22 சதவீத மானோர் ஒழுக்க மற்றும் அறநெறிக்காகவே வாக்களித்துள் ளனர் என சி.என்.என. மேற்கொண்ட ஆய்வு தெரியவந்துள்ளது. புஷ் ஆதரவாளர்களால் இரண்டாவதாக கருதப்பட்ட விடயம் பொருளாதாரம் மற்றும் தொழில்வாய்ப்பாகும். பயங்கரவாத விவகாரம் மூன்றாம் இடத்தையே பிடித்துள்ளது. புஷ்ஷிற்கு வாக்களித்தவர்களில் 19 சதவீதமானோர் இவ்விடயம் தொடர்பாக புஷின் நிலைப்பாட்டை ஆதரிப்பவர்கள். ஈராக் விவகாரம் புஷ் ஆதரவாளர்கள் மத்தியில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. இவரிற்கு வாக்களித்த 15 சதவீதத்தினர் புஷ்ஷின் ஈராக் கொள்கைகளுக்காகவே வாக்களித்துள்ளனர்.

ஆனால் ஹெரிக்கு வாக்களித்தவர்களில் 73 சதவீதத்தினர் ஈராக் தொடர்பாக அவரின் கொள்கைக்காக வாக்களித்துள்ளனர். சுகாதார நலன் வரிகள், கல்வி ஆகிய உள்நாட்டு விடயங்களுக்கு 10 சதவீதமானோர் வாக்களிதது்ள்ளதாக அவ் ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறே ஏனைய வலைப் பின்னல்கள் நடத்திய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

# ஈராக்கில் தீவிரவாதிகள் அதிரடி நடவடிக்கை 21 பொலிசார் கதறக்கதற சுட்டுக்கொலை

(பாக்தாத்)

ஈராக்கில் 21 பொலிசாரை தீவிரவாதிகள் கதறக்கதறச் சுட்டுக் கொன்ற சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

பொதுமக்கள் மீது ஈராக் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 34பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, இதற்கு பழிவாங்கும் வகையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாக்தாத்திலிருந்து வட மேற்காக 200 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் மீது 90 நிமிடங்கள் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலின் பின் இவர்களால் பிடிக்கப்பட்ட 21 பொலிசாரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பலூஜா நகரில் அமைதித் தீர்விற்கான கதவுகள் மூடப்பட்டு விட்டதாக ஈராக்கின் இடைக்கால பிரதமர் இயாத் அல்லாவி அறிவித்துள்ளார்,இடைக்கால பிரதமரிடமிருந்து உத்தரவு கிடைக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் பலூஜா நகர் . தாக்கப்படுமென அமெரிக்க படைகள் தெரிவித்துள்ளனர். இதனிடையே பாக்தாத் விமான நிலையத்துக்கான வீதியில் மற்றுமொரு தற்கொலை தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

# சுயவருமான பொருளாதார உதவித்திட்டத்தின் கீழ் திருமலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி

(திருமலை)

**ஈச்சிலம்பற்று பிரதேச செயலகர் பிரிவில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒரு தொகுதி பயனாளிகளுக்கு சுய வருமான பொருளாதார உதவித்திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகம் கடந்த புதன்கிழமை உதவிகளை வழங்கியுள்ளது.**

மண்மீட்புப் போரில் பிள்ளைகளை இழந்த குடும்பங்களுக்கே இவ்வுதவிகள் வழங்கப்பட்டன. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் 05 பயனாளிகளுக்கு மாட்டு வண்டில்களை வழங்கும் நிகழ்வில் முதலில் ஒரு பெண் பயனாளிக்கு மாட்டு வண்டிலை வழங்கித் தொடக்கி வைத்தார். பின்னர் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா, புனர்வாழ்வுக் கழகம் வழங்கிய நிதியுதவியுடன் இரண்டு பயனாளிகளால் ஆரம்பிக்கப்பட்டகடைகளை தொடககிவைத்தார்.

“சுயவருமானத்தை ஏற்படுத்தும் பொருளாதார ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ்முதலில் தெரிவு செய்யப்பட்ட முப்பது பயனாளிகளுக்கு அவர்கள் விரும்பிய வண்ணம் உதவி வழங்கப்படும்” என்று மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் குறிப்பிட்டார். தரப்படும் நிதி உதவியைத் துணையாகக் கொண்டு வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றத்தைக் காணக் கூடிய விதத்தில் பயனாளிகள் இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சயும் பேசினார். பின்னர் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா, பயனாளிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். அப்போது பயனாளிகளின் தேவைகளையும் குறைகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

ஈச்சிலம்பற்று, புன்னையடிக் கிராமத்தில் திறக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதேச அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழக ஈச்சிலம்பற்றுப் பிரதேச இணைப்பாளர் என்.அன்பழகன் நிகழ்வை நடத்தினார். (25)

## 20 குடும்பங்கள் இடம்பெயர்வு

மழைகாரணமாக சுமார் 20 குடும்பங்கள் இடம்பெயர்ந்து திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளன. இவர்களுக்கான உணவை மாங் குளம் அபிவிருத்தி நிறுவனம்வழங்கி வருவதாக நிறுவன ஊழியர் திருமதி சாந்திகூறியுள்ளார். (09)

## முல்லை இலங்கை வங்கிக்கிளை காசோலைகளை மாற்ற தாமதமேன்?

(அலுவலகசெய்தியாளர்)

தென்பகுதி வங்கிகளின் காசோலைகள் யாவும் கிளிநொச்சி இலங்கை வங்கிக்கிளையில் ஒரு வாரத்தினுள் மாற்றி பணம் பெறக்கூடிய நிலையில் உள்ள போதிலும் முல்லைமாவட்ட இலங்கைவங்கிக் கிளையின் காசோலையினைக் கிளிநொச்சி இலங்கை வங்கியில் மாற்றி பணம்பெறுவதற்கு ஒரு மாதம் வரை காத்திருக்க வேண்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து இலங்கை வங்கி கிளிநொச்சிக்கிளை வாடிக்கையாளர்கள் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு போன்ற வங்கிகளின் காசோலைகள் யாவும் கிளிநொச்சி வங்கியிலிடப்பட்டு ஒருவாரத்தினுள் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதாகவும், முல்லைத்தீவு இலங்கை வங்கிக்கிளையின் காசோலையினை கிளிநொச்சிஇலங்கை வங்கிக்கிளையில் மாற்றிப் பணத்தை பெறுவதற்கு ஒரு மாத காலம் செல்வதாகவும்,

இதன் காரணமாக முல்லைத் தீவு இலங்கை வங்கியின் காசோலைகளை பெற்றுக்கொள்ள வியாபாரிகள் முதல் மற்றும் நிறுவனங்களும் தயக்கம் காட்டி வருவதன் காரணமாக மேற்படி வங்கியின் காசோலையினைப் பெற்றவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவித்ததுடன் வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இச்சிரமத்தினை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளனர். (சோ)

## தரமற்ற அரிசியால் மக்கள் விசனம்

(முல்லை)

முல்லைத்தீவு சிலாவத்தைக் கூட்டுறவுச்சங்கக்கிளையில் மக்களுக்கு நிவாரணத்திற்காக வழங்கப்படும் அரிசி பாவனைக்குதவாத வகையில் தரக்குறைவாக உள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு உடன் தெரிவிக்கப்பட்ட போதும், இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

நிவாரணம் எடுக்கும் இம் மக்கள் இவ்வரிசியைப் பெறாவிட்டால் சீனியும், மாவும் கிடைக்காது என்ற நிலையில் இவ் அரிசியை வாங்கிச்சென்றதை அவதானிக்க முடிந்தது குறிப்பிடத்தக்கது. (20)

## நாநூறு குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் உணவு விவசாய ஸ்தாபனமும் இணைந்து கனகாம்பிகைக்குளம், சாந்தபுரம் குடியிருப்பு மக்களுக்கு நான்கு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா பெறுமதியுடைய நல்லின வளர்ப்புக் கோழிக்குஞ்சுகளை வழங்கியுள்ளன.

ஒரு குடும்பத்திற்கு ஆயிரத்து இருநூறு ரூபாபெறுமதியுடைய எட்டுக்குஞ்சுகள் வீதம் நாநூறு குடும்பங்களுக்கு மூவாயிரத்து இருநூறு கோழிக் குஞ்சுகளை வழங்கியுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதியன்று பிற்பகல் 3.00மணிக்கு சாந்தபுரம் பாடசாலை மண்டபத் தில் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவன கிளிமாவட்ட இணைப்பாளர் சி.சிவனேசன்தலை மையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் உணவுவிவசாய ஸ்தாபன இணைப்பாளர் மா.செல்வராசா, சி.தேவராசா மற்றும் கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## முன்பள்ளிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

வவுனியா சேமமடு படிவம்-2 இல் மீளக்குடியேறிய மக்களின் நன்மைகருதி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் DRC நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இத் திட்டங்களில் ஓர் அங்கமாக முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

அடிக்கல் நாட்டலை சேமமடு படிவம் -2 பாடசாலை அதிபர் கந்த நேசனும் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொழில் நுட்பஉத்தியோகத்தர் பி.சதானந்தனும் நாட்டிவைத்தனர். இதில் முன்பள்ளிச்சிறார்களும் , பெற்றார்களும் கலந்துசிறப்பித்தனர்.

## பொருண்மிய மதியுரையக அனுசரணையில் கணினி வகுப்பு ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரண்ணையுடன் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கடந்த 2ஆம் திகதி காலை கணினி வகுப்பு ஆரம்பித்துவைக்கப் பட்டது. புதுக்குடியிருப்பு ம.வி. அதிபர் வீ.கே.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா ஏற்றிவைக்க தமிழீழத்தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து வகுப்பறையினைப் பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ண ராசா சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார்.

பொருண்மிய மதியுரையகத்தின் பணிப்பாளர் திலக், இயக்குனர் தாஸ்உட்பட பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா, முல்லை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன ஆகியோர் கலந்துகொண்டனர். (08)



வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய ஆங்கிலதின நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகைதந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோருக்கு மலர்ச்செண்டு கொடுத்து சிறுமி ஒருத்தி வரவேற்பதனையும் ஆங்கிலப்பாடலை மாணவிகள் இசைப்பதனையும் படங்களில் காணலாம். (படம்:- ஆறு சுபாஸ்கரன்)

## முகாம்களில் தங்கியுள்ளோரை மீள்குடியமர்த்த நடவடிக்கை

(மன்னார்)

கடந்த1990ஆம் ஆண்டு மன்னாரிற்கு இடம் பெயர்ந்து சென்ற எருக்கலம்பிட்டி தெற்கு கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் உப்புக்குளம், தாராபுரம், தலை மன்னார், பியர், சிறுத்தோப்பு, புதுக்குடியிருப்பு, விடத்தல்தீவு, சிலாவத்துறை, ஆகிய இடங்களில் வசித்து தற்போது புத்தளம், தில்லையடி போன்ற இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களை இப்பகுதிகளில் மீளக்குடியமர்த்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்சமயம் மன்னாரில் இடம் பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் இவர்களுக்கு தற்காலிக கொட்டகை அமைத்து ஊக்குவிப்புக் கொடுப்பனவு போன்ற அடிப்படை வசதிகள செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.(மி,

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர் வரும் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா அரச அதிபர் க.கணேசன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடைதிட்ட முன்மொழிவு, பிரமாண அடிப்படையிலான நன்கொடைத்திட்ட முன்மொழிவு, பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் உட்பட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.(10)

## கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச ரீதியிலான சங்கமம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தேசிய எழுச்சிப்பேரவையின் சங்கம நிகழ்வுகள் பிரதேச ரீதியாகத் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் பூநகரிப் பிரதேசத்தில் சங்கம நிகழ்வு நாளை 9ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு பூநகரி ஆலங்கேணி பிரதேச அரசியல்துறை செயலகத்திலும், பரந்தன் பிரதேசத்தில் சங்கமநிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் 3.00மணிக்கும் நடைபெறவுள்ளது.

தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர், மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர், மாவட்டப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் நிகழ்வில் கலந்துகருத்துரை வழங்கவுள்ளனரென கிளிமாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (சோ)

## இருபார ஊர்திகள் குடைசாய்வு


வட்டக்கச்சி பிரதான வீதியில் இருபாரவூர்திகள் குடைசாய்ந்தன. கிளிநொச்சியில் இருந்து இராமநாதபுரம் கல்மடுநகருக்கு கடந்த வெள்ளிக்கிழமை அரிசி ஏற்றிச் சென்று கொண்டிருக்கையில் வட்டக்கச்சி சந்தைப் பகுதிக்கு அண்மையாக இரு பாரவூர்திகளும் குடைசாய்ந்தன. இப் பாரவூர்திகளை பிரதான வீதியில் இருந்து வெளியே எடுப்பதற்கு மிகவும் நீண்டநேரம் எடுத்தமை குறிப்பிடத்தக்கது. (12)

# மாவீரர் பிரேமன் நினைவாக மணிமண்டபம் உசன் இராமநாதன் ம.வி.யில் திறந்துவைப்பு

(தென்மராட்சி)

மாவீரர் ஒருவரின் நினைவாக அவரது தாயாரினால் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ரூபா 10 இலட்சம் செலவில் முழு அரங்க மணி மண்டபம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு தேச விரோதிகளின் தாக்குதலில் வீரச்சாவடைந்த பிரேமன் என்ற மாவீரரின் நினைவாகவே, அவருடைய தாயார் ஈஸ்வரி அம்மா இந்த மண்டபத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.






இதன் அங்குரார்ப்பண வைபவம் மிக எளிமையாக நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா, செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், முன்னாள் அதிபர் சி.சரவணபவன் (சிற்பி) மற்றும் பாடசாலை அதிபர் நடராசா நவரத்தினராசா மற்றும் தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (28)

# மின்சார ஒழுக்கினால் வர்த்தக நிலையம் அழிவு!

(அலுவலக செய்தியாளர்)

மின்சார ஒழுக்கினால் ஒரு வர்த்தக நிலையம் எரிந்ததினால் அங்குள்ள எரிபொருள்கள் உட்பட சில விற்பனைப் பொருள்களும் எரிந்து சாம்பராகின. இச் சம்பவம் பருத்தித்துறை அல்வாய் வடக்கில் வத்தளையில் புதன்கிழமை அதிகாலை மூன்று மணிக்கு நடந்துள்ளது. இங்குள்ள வீ.எம்.ஆர்.வர்த்தக நிலையத்திலேயே தீப்பற்றியது. இதன் போது வர்த்தக நிலையத்திலிருந்த பெற்றோல், மண்ணெய் ,பிளாஸ்ரிக் வாளிகள், கயிறு போன்றவை எரிந்துள்ளன.இதன் மேல்மாடிக்கட்டடத்தில் சிலர் நித்திரையில் இருந்த போதிலும் ஆபத்தின்றித் தப்பித்துக் கொண்டனர்.(45)

# இன்று பொது மண்டபம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நிகொட் திட்டத்தின் கீழ் வடமராட்சி கரவெட்டியில் உள்ள அந்தனத்திடல் பகுதியில் 4மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது மண்டபத் திறப்புவிழா இன்று முற்பகல் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா, கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர் கரவெட்டி மக்களின் அபிவிருத்தியை இலக்காக் கொண்டு இம் மண்டபம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (33)

## பிரதேச சபையின் வேண்டுகை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைகளை உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் தாமதமின்றி சாவகச்சேரிப் பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (29)

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குக!

## யாழ். அரச அதிபருக்கு அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் தற்பொழுது பெய்துவரும் அடைமழையால் பாதிப்புற்றுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கங்களின் சமாசம் யாழ்.அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

தற்பொழுது பெய்துவரும் அடைமழை காரணமாக யாழ்.குடாநாட்டு இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள தற்காலிகக் குடியிருப்புகளில் வாழ்ந்துவரும் மக்கள் பலவித பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இடம்பெயர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் இராணுவக் கெடுபிடிகள் காரணமாகத் தம் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத பல்லாயிரக்கணக்கான மக்கள் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 75இற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள தற்காலிக இருப்பிடங்களில் வாழ்ந்து வருகின்றனர். கூரைகள் உரியமுறையில் வேயப்படாததுடன், குடிநீர் மலசலகூட வசதிகள் இன்மை போன்ற அடிப்படை வசதிகள் அற்றநிலையில் இவ்வாறான இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் வாழ்ந்து வரும்நிலையில் யாழ்.குடாநாட்டில் தற்பொழுது அடைமழை பெய்து வருகிறது. இதனால் இவ்வாறான தற்காலிக இருப்பிடங்கள் பலவற்றுள் மழைநீர் உட்புகுந்திருப்பதுடன் சில குடியிருப்புக்கள் இடிந்து வீழ்ந்தும் உள்ளன.

இதைவிட மலசலகூடம், குடிநீர் வசதி என்பன இல்லாத நிலையில் தற்பொழுது பெய்துவரும் அடைமழையால் முகாம்களில் அடிப்படை சுகாதார நிலைமைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன் தொற்றுநோய்கள் பரவும் அபாயங்களும் தோன்றியுள்ளன. எனவே மழைகாரணமாகப் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த முகாம் வாழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கங்களின் சமாசம் யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (33)

# குளிர்பான தயாரிப்பு விற்பனை உரிமம் பெற வலியுறுத்து

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிபெறாது குளிர்பான வகைதயாரிப்பு மற்றும் விற்பனைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி நகரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது. சாவகச்சேரி நகரிலும் அண்டிய பகுதிகளிலும் சுகாதார முறைகள் பேணப்படாது யூஸ், சர்பத் போன்ற குளிர்பான வகைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்து வருவோர் தொகை அதிகரித்திருப்பதால்ஏற்பட்டுள்ள சுகாதாரப்பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு இவ் எச்சரிக்கையை விடுத்துள்ள சாவகச்சேரி நகரசபை அனுமதி உரிமத்தைப் பெற்று குளிர்பான வகைகளைத் தயாரித்து விற்பனை செய்ய விரும்புவோர் உடனடியாகத் தம்மிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்துள்ளது. (33)

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு 'சமூக தீபம்' கௌரவப் பட்டம்

லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளை நிதியத்தினால் 'சமுக தீபம்' என்னும் கௌரவப பட்டத்தை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயபரிபாலனசபைத்தலைவர் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வழங்கி கௌரவித்துள்ளனர்.

லண்டனில் இடம்பெற்ற இந்து இளைஞர் பேரவையின் சைவத்தமிழ் மாநாடு கடந்த மாதம் இடம் பெற்றது. இம் மாநாட்டில் வைத்து இப்பட்டம் அறிவிக்கப்பட்டது. லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளை நிதியத்தினர் கடந்த 31ஆம் திகதி தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்திற்கு சமுகம் கொடுத்து கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு ஆலயமண்டபத்தில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் சமூகதீபம் பட்டத்திற்கான சான்றிதழையும் கையளித்துச் சென்றுள்ளனர். (41)

# யன்னல் கம்பிகளை உடைத்து திருடர்கள் கைவரிசை

(நல்லூர்)

தனிமையில் இருந்த முதியவரின் வீட்டில் யன்னல்கம்பிகளை உடைத்து நுழைந்த திருடர்கள் சுமார் 20ஆயிரம் பெறுமதியான மோதிரம் மற்றும் கைக்கடிகாரங்களைத் திருடிக்கொண்டு சென்றுள்ளனர்.

அரியாலை இலந்தைக்குளம் வீதியில் உள்ள க.கணபதிப்பிள்ளை என்பவரின் வீட்டில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முதியவர் தூக்கம் கலைந்து எழுந்து சத்தம் இட்டதைத் தொடர்ந்து திருடர்கள் எடுத்த சூட்கேசைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள். இக்களவு சம்பந்தமாக யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (41)

# வீட்டு மின்னியல் பயிற்சி வகுப்பு சீரற்று நடைபெறுவதால் விசனம்

வீட்டு மின்னியல் பயிற்சி வகுப்பு சீரற்று நடைபெற்று வருவதனால் இப்பயிற்சியை மேற்கொள்ளும் ஐம்பது இளைஞர்கள் மத்தியில் பெரும் விசனம் ஏற்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்பு ஆரம்பித்து நான்கு மாதங்களாகியும் மாணவர்கள் மத்தியில் திருப்தி நிலை ஏற்படவில்லை.

பருத்தித்துறை தம்பசிட்டியில் இப்பயிற்சி வகுப்பு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி வகுப்பு ஒழுங்காக நடைபெறாததால் இம்மாணவர்கள் இன்னும் இரண்டு மாதங்களில் எப்படி பரீட்சைக்குத் தோற்றுவது என்று புரியாமல் அவதியுறுகின்றனர்.

இம்மாணவர்களது நன்மை கருதி இப்பயிற்சியுடன் தொடர்புடைய சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கையை உடன் மேற்கொள்ள வேண்டும். (45)

# இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ளோருக்கு தற்காலிக வீடுகள்

## -யூ.என்.எச்.சி.ஆர். திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களின் நன்மை கருதி அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதுவராலயத்தினால் தற்காலிகமாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்கிலிருந்து இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இடம் பெயர்ந்து இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலய நடைமுறையினால் மீளக்குடியமர முடியாத நிலையில் அடிப்படை வசதிகள் அற்ற முகாம்களில் வாழ்ந்து வரும் மக்களது நலன்கருதியே இவ்வாறு வீடுகளை அமைத்துக் கொடுக்க அகதிகளுக்கான ஐ.நா. தூதுவராலயம் முன் வந்துள்ளது. (33)

# தீவகத்தில் த.பு.கழகம்-நிகொட் இணைந்து அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், நிகொட் அமைப்பும் இணைந்து யாழ். தீவகப்பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங் களை முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறான அபிவிருத்தித்திட்டத்தின் முதற்கட்டப்பணிகள் தற்போது எழுவைதீவுப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கல்வி, பொருளாதாரம்,சமூக மேம்படுத்தல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. போரினால் பாதிக்கப்பட்ட தீவகப் பிரதேசத்தையும் அங்குள்ள மக்களது சமூகதரத்தையும் மேம் படுத்துவதே இதன் நோக்கமாகும்.(33)

# மாவீரன் மேஜர் பசீலன்

ஆக்கம்
**யோகரட்ணம்**

தமிழீழ விடுதலைப் போரியல் வரலாற்றுக்கால நகர்வில் தமிழீழத்தை அடைவதற்காக மாவீரர்கள் செய்த செயல் திறன்கள் அளப்பெரியது, மட்டுமன்றி மனித வாழ்வியல் தியாகங்களை மீறியது கூட. ஏனெனில் எமது போராட்ட வளர்ச்சிக்கு பாடமாகவும், பாிணாமமாகவும் அமைந்தது மாவீரர்களின் பற்பலகோணங்களில் அமைந்த செயல்திறன் மிக்க தியாகங்கள் ஆகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளி என்னும் சொல்லுக்கு அர்த்தம் காணும் போது, தான் கொண்ட இலட்சியத்தை அடைவதற்காக, எதையும் எந்த வேளையிலும் செய்து இழக்கக் கூடிய மனப் பார்வையையும், பாங்கையும் கொண்டு இருப்பவரையே போராளியாகக் காண்கின்றோம்.

தனக்காக இல்லாது மற்றவர்களுக்காக தன்னையும் தன் உயிரையும் கொடுப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதனால் தான் மாவீரர்கள், போராளிகள் இடையே அன்பு, இரக்கம், சகிப்புதன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஒழுக்கம் போன்ற நற்குண இயல்புகள் காணப்பட்டன, காணப்படுகின்றன.

இத்தகைய வரப்புக்குள் உட்பட்ட மாவீரனாக மேஜர் பசீலன் அவர்களைக் காண்கின்றோம். இவருடைய தியாகம்மிக்க அர்ப்பணிப்பும், செயல்திறன் மிக்க செயற்பாடும், முற்போக்குக் கொண்ட சிந்தனைக் கண்ணோட்டமும், துணிவும், தமிழீழ விடுதலைப் போரின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் புதுப்புது அத்தியாயத்தை தோற்றுவித்தது என்றே கூறக்கிடக்கின்றது.

இவரின் பிறப்பானது பல வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட முள்ளியவளை என்னும் வீரம் விளைகின்ற மண்ணில் 14.05.1961இல் நிகழ்ந்தது. இவருக்கு ஐந்து சகோதரர்கள். இவரது பெற்றார். இவருக்கு இட்டபெயர் அமிர்தலிங்கம். இவர் தனது ஆரம்பக்கல்வியினை முள்ளியவளை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை வித்தியானந்தா கல்லூரியிலும் கற்றார்.

அமிர்தலிங்கம் படிப்பில் சாதாரண நிலையில் காணப்பட்டாலும் விளையாட்டு, கலை, சமூகநலன் போன்றவற்றில் தீவிரநாட்டம் கொண்டவராகக் காணப்பட்டார். இவருடைய திறமைகள் பாடசாலை மட்டங்களில் மட்டுமல்ல, அகில இலங்கை மட்டத்தில் கூட பிரகாசித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறந்த விளையாட்டுக்கழகமாகத் திகழ்ந்த ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தில் சிறந்த விளையாட்டு வீரனாக இருந்தார். தனக்கென விளையாட்டு ரசிகர்கள் கூட்டத்தினையும் தன் விளையாட்டுச் சாதுரியத்தால் கவர்ந்திருந்தார்.

தமிழரின் பாரம்பரிய கலைவடிவமான நாட்டுக்கூத்தில் இவர்மிகவும் தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டார். அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட நாட்டுக் கூத்துப் போட்டியில் சிறந்த நடிகனாகத் தெரிவு செய்யப்பட்டு பேராசிரியர் கைலாசபதி அவர்களின் பாராட்டையும் பெற்றார். தான்பிறந்த மண்ணுக்கும் தான் கற்ற பாடசாலைக்கும் பெருமை தேடித்தந்த திறமைமிக்க மாவீரனின் செயல்திறன்கள் அழியக்கூடாது என்பதற்காக வன்னிப்பிரதேச மக்கள் முள்ளியவளையில் மேஜர் பசீலன் பொது விளையாட்டு மைதானம் ஒன்றினையும் கலை அரங்கினையும் அமைத்தனர்.

பொது நலன்களில் அக்கறை கொண்டவனாக இந்த மாவீரன் காணப்பட்டதால் முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் பல்கலைக்கழகம் புகும் வறிய மாணவருக்கான உதவிபுரியும் நிதியம் மாவீரன் மேஜர் பசீலனுடைய பெயரிலே இயங்கி வருகின்றது.

1983ம் ஆண்டு இனவெறியர்கள் தென் இலங்கையில் வாழ்ந்த தமிழர்களை வெட்டியும், சுட்டும், பெண்களை மானபங்கப்படுத்தியும், குழந்தைகளைக் கொதிக்கும் தார்களுக்குள் தூக்கிவீசியும் அராஜகங்களை செய்தார்கள் இதன் நிமிர்த்தம் பகுத்தறிவு மிக்க அமிர்தலிங்கத்தை விடுதலை வேங்கை பசீலனாக உருவாக்கியது.

1983.11.2ஆம் அன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தேசியத்தலைவர் அவர்களின் வழியில் இணைந்து இந்தியத்தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் கும்பிராப்பிட்டி 3ம் பயிற்சி முகாமில் பயிற்சி முடித்து திறமைமிகு வேங்கையாய் உருவானான். பயிற்சிக்காலத்தில் இவரது ஆர்வத்தினையும் திறமைகளையும் கண்ட தேசியத்தலைவர் அவர்கள் மெய்ப்பாதுகாவலனாக தன்னுடன் வைத்திருந்தார். தமிழீழத்துக்கும், தமிழகத்துக்கும் இடையேயான கடல் போக்குவரத்துக்கு முக்கிய நம்பிக்கைக்குரிய கண்ணாய் காவலனாய் செயற்பட்டான்.

1984ம் ஆண்டு தனது சொந்த மாவட்டமான முல்லைத்தீவுக்கு வந்த பசீலன் 05.08.1984ஆம் நாளன்று விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய வெற்றித்தாக்குதலில் பங்கு கொண்டான். 13.05.1985ஆம்நாள் அன்று விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட கொக்குளாய் இராணுவமுகாம் மீதான தாக்குதலில் பங்கு கொண்டதுடன் 1986ஆம் ஆண்டு பூநகரிமுகாம் மீதான தாக்குதலிலும் மணலாறு முந்திரிகைக்குளம் மீதான தாக்குதலிலும், வவுனியா கண்ணிவெடித் தாக்குதல், நீராவிப்பிட்டி தாக்குதல்கள், கிளிநொச்சி இராணுவமுகாம் முடக்கி வைப்பு தாக்குதல் கோப்பாய், யாழ் பல்கலைக்கழக வளாக இந்திய இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்கள் என்பன குறிப்பிட்டு கூறக்கூடிய தாக்குதல்களாக அமையப் பெற்றிருந்தன.

இத்தாக்குதல்களில் மணலாறு முந்திரிகைக்குளத்தில் சிறிலங்கா இராணுவத்துடன தொடுக்கப்பட்ட தாக்குதல் தமிழீழ விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் ஓர் முக்கியமான வெற்றித்தாக்குதலாக அமைந்திருந்தது. ஏனெனில் 13 ஏ.கே ரகத் துப்பாக்கிகள் எதுவிதமான இழப்பும் இன்றி முதன் முதலில் கைப்பற்றப்பட்டது இவனது திறமையான செயற்பாட்டால். இத்தாக்குதலின் நிமிர்த்தம் விடுதலைப் புலிகள் அக்காலப்பகுதியில் ஆயுதரீதியாகவும், அரசியல், உளவியல் ரீதியாகவும், இத்தாக்குதல் மூலம் பலம் அடைந்தனர் என்றே கூறலாம். அத்துடன் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் பாராட்டும் மிகையாகக் கிடைத்தது இத்தாக்குதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.


இந்த வீர மாவீரன் வழிநடத்தி களம் புகுந்த தாக்குதல்கள் இவைமட்டுமல்ல இன்னும்பல வெற்றித் தாக்குதல்களை திட்டமிட்டு வழிநடத்தி தானும் போர்க்களம் புகுந்தான். கிளிநொச்சி, வவுனியா, யாழ், முல்லை, மணலாறு என இராணுவத்துக்கு எதிரான இந்த வீரத்தலைவன் வளர்த்த பசீலனின் தாக்குதல்கள் விரிந்து கிடந்தன.

வன்னிப்பிராந்திய விடுதலைப்புலிகளின் போர்க்கள வரலாற்றில் ஓர் சிறிலங்கா இராணுவமுகாமை முதல் முதலில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து முடக்கி வைத்திருந்த பெருமை இந்த வீரமைந்தனையே சாரும். 1985ஆம் ஆண்டு கிளிநொச்சியில் முகாம் அமைத்திருந்த சிறிலங்கா இராணுவத்தினர், தமிழ் இளைஞர்களை கைது செய்து சித்திரவதைப்படுத்தி, சுட்டும் அழித்தனர். இந்த தமிழ் இளைஞர்களின் அழிப்பினை எவ்வாறு இல்லாமல் செய்யலாம் என எண்ணிய பசீலன், தலைவர் அவர்களின் சிந்தனைக்கு அமைவாக தனது அணியின் திறமைமிகு செயற்பாட்டால் சிறிலங்கா இராணுவத்தினை இராணுவம் வெளியே வராதபடி முடக்கிவைத்திருந்தான். இவ்வாறு சிறிலங்கா இராணுவமுகாமினை தனது அணியின் தாக்குதல் நடவடிக்கையால் முடக்கி வைத்திருந்த போரியல்திறன் விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் முன்னேற்றகரமான இராணுவ நடவடிக்கையாக இருந்தது குறிப்பிட்டு கூறக்கூடியதாக உள்ளது.

1986ஆம் ஆண்டு காலப்பகுதியில் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்துக்குச் சொந்தமான உலங்குவானூர்தியில் இருந்து மேஜர் ஜெனரல் கொபேக்கடுவ அவர்களால் பிரசுரங்கள் போடப்பட்டன. அந்தப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்ட விடயம் பசீலன் நீ கோழைத்தனமாக எங்களை மறைந்திருந்து தாக்காமல் நேருக்கு நேரே சண்டைபிடித்துப் பார்ப்போம் வா என சிறிலங்கா இராணுவத் தளபதி மாவீரன் பசீலனுக்கு சவால் விடுத்திருந்தார்.

சிறிலங்கா இராணுவத்தளபதியின் பிரசுரத்தை வைத்து நோக்குகின்ற போது வீரப்பசீலனின் கெரில்லாப் போர்முறைத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவத்தளபதி தனது பலவீனத்தை தனது பலமாக, பிரசுரம் மூலம் வெளியிட்டிருந்தமை நகைப்புக்கு இடமாக புலப்படுவதுடன் சிறிலங்கா இராணுவத்தளபதியை கெரில்லாப்போர் முறைமூலம் கலங்க வைத்த பெருவீரனாகவும் காணப்படுகின்றான் என்பது இந்தப்பிரசுரம் மூலம் புலனாகுகின்றது.

100இற்கு மேற்பட்ட காச நோயாளர்கள் இருக்கின்ற போதும இவர்களுக்குச் சரியான முறையில் சிகிச்சை அழிக்கமுடியாததுடன் அவா களின் வைத்திய ஏனைய செலவுக் காக வழங்கப்படும் இப்பணம் எடுக்க முடியாது நோயாளிகள் திண்டாடு கின்றனர். அவ்வாறு வைத்தியம் பெறவேண்டுமானால் வவுனியா வுக்கோ அல்லது யாழ்ப்பாணத்துக் கோதான் கொண்டுசெல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்றும் தெரிவித்தனர். (20)

# இரு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கல்


(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்தின் விவசாயிகளுக்கு 10 இரண்டுசக்கர உழவு இயந்திரங்களும் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் என்பன கையளிக்கப்படும் நிகழ்வு பாண்டியன்குளம் கமநலசேவை மத்திய நிலையத்தில் கடந்த செவ்வாயன்று மு.ப.11.00மணிக்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ம.ஜெகு, வவுனிக்குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் வ.தவக்குமார் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியை பாண்டியன்குளம் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் தொ.வேங்கைமாறன் ஏற்றியதைத் தொடர்ந்து அகில இலங்கை விவசாய சம்மேளனக் கொடியை முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏற்றிவைத்தார்.

சிறப்புரையை முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து விவசாயிகளுக்கு 10 இரண்டு சக்கர உழவுயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்கள் என்பனவோடு நீர் இறைக்கும் இயந்திரம் 05, தெளிகருவிகள் 15 என்பன கடனாக வழங்கப்பட்டன. (24)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
1929-11-01

உதிர்வு
2004-09-25

அமரர்
சிவகுரு-சண்முகம்
அருளகம்
அல்லிப்பளை - பளை.

எமது தனியார் பேருந்து உரிமையாளர் கழகத்தின் உரிமையாளரும், உபதலைவருமான திரு.சண்முகம்-சந்திரபாலன் அவர்களின் தந்தையாரின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமைப்பாளர், நிர்வாக உறுப்பினர்கள், உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பணியாளர்கள்

* தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்
வன்னி

(5254)



# பணிநிலை வேண்டுகை

பாண்டியன் வாணிபத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உள்ளன.

## கணக்குப்பதிவாளர், விற்பனையாளர், களஞ்சியக்காப்பாளர்

**அகவை பொதுவானது:**-18-45 வரை

**கணக்குப்பதிவாளர்:**- ஆண், பெண் இருபாலாரும்

**விற்பனையாளர், களஞ்சியக் காப்பாளர்:**- ஆண்கள் மட்டும்

**தகைமை:-**

**கணக்குப்பதிவாளர்:**- உயர்தரம், வர்த்தகம் பயின்று கணக்கியலில் சித்தியடைந்திருத்தல்

**விற்பனையாளர்:**- ஆண்டு 08 பயின்றிருத்தல்

**களஞ்சியக்காப்பாளர்:**- சாதாரணதரம் தேறியிருத்தல்

மேல் உள்ள பணிநிலையில் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**நேர்முகத் தேர்வு**

**நாள்:**-15.11.2004 திங்கட்கிழமை

**நேரம்** :- கணக்குப்பதிவாளர் - காலை 10.00மணி
:- விற்பனையாளர், களஞ்சியக்காப்பாளர், மாலை 3.00மணி


**இடம** :- பாண்டியன் வாணிபம், நடுவப்பணிமனை, றெட்பானா சந்தி, விசுவமடு..
நேர்முகத்தேர்விற்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
கல்விச்சான்று, அடையாளஅட்டை, குடும்பப்பதிவு அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

(5353)

ஆளுகை,
பாண்டியன் வாணிபம்,
நடுவப்பணிமனை.



# வீர வணக்கம்



தாயின் மடியில்
14.09.1956

தாயக மண்ணில்
08.11.2001

தமிழீழத்
தேசியத்துணைப்படை வீரர்
சக்திவேல்
சின்னையா சக்திவேல்

நி.மு.18 ஏக்கர் இடதுகரை முத்துஐயன்கட்டு.

08.11.2001 அன்று சிலோன்தியேட்டர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான பதுங்கித் தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்"

(5249)

# மாகாண சபைகள்,உள்ளூராட்சி அமைச்சு,
# வடக்கு-கிழக்கு மாகாண சபை
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## "ஆஅவ" கடன் இல. 2043-SRI (SF)
# யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல:03

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்ட (CAARP) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ")கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் (NECORD) கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | ஒப்பந்தத்தின்பெயர் | ஆகக் குறைந்த இக்டாட்பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் [ரூபா] |
|---|---|---|---|---|
| 01. | JF/CAARP/ED/01 | யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் 90'x25' அளவுடைய இரண்டு மாடி விஞ்ஞான ஆய்வு கூடம் மீளமைத்தல். | M 6 | 52,000/= |
| 02. | JF/CAARP/ED/05 | இடைக்காடு மகாவித்தியாலயத்தில் 70'x25' அளவுடைய இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தலும், ஆசிரியர் விடுதி புனரமைத்தலும் | M 7 | 41,000./= |
| 03. | JF/CAARP/ED/08 | பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 90'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M 7 | 35,000/= |
| 04. | JF/CAARP/ED/10 | மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 110'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M 6 | 51,000/= |
| 05. | JF/CAARP/ED/13 | மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் 90'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M 7 | 35,000/= |
| 06. | JF/CAARP/ED/14 | தும்பளை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் 70'x25' இருமாடி புனரமைத்தலும் 40'x25' இருமாடிக் கட்டடம் பூரணப்படுத்தலும், அத்துடன் நீர்தாங்கி நிர்மாணித்தல். | M 7 | 36, 000/= |
| 07. | JF/CAARP/ED/15 | உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் 130'x25' மூன்று மாடிக் கட்டடம் பூரணப்படுத்தல் | M 7 | 44,000/= |
| 08. | JF/CAARP/ED/16 | சரவணை சின்னமடு வித்தியாலயத்தில் 80'x25' வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M 8 | 11,000/= |
| 09. | JF/CAARP/ED/19 | தெல்லிப்பளைமகாஜனா கல்லூரிக்கு மின்சாரம் மற்றும் நீர்விநியோக திருத்த வேலைகள் செய்தல். | M 9 | 8,000/= |
| 10. | JF/CAARP/HS/03 | பருத்தித்துறை அம்பன் மத்திய மருத்தகமும் பிரசவ விடுதியும் புனரமைத்தல். | M 7 | 36,000/= |
| 11. | JF/CAARPHS/04 | கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் தாதிமார்களுக்கான விடுதியும் வாட் இல 04 புனரமைத்தலும், வைத்திய அதிகாரிகளின் விடுதி அமைத்தலும்- தொகுதி-1 | M 7 | 49,000/= |
| 12. | JF/CAARPHS/04 | கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் சமையல் அறையும் மருந்தகமும் புனரமைத்தல்-தொகுதி -02 | M 7 | 29,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) இருத்தல் வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்டவேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும், இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் /அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV "இக்டாட்"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப்பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டி ருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

Vi. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. மேலே உள்ளஅட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் (NECORD) வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர், அலுவலகம்,(NECORD),கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.தொலைபேசி : 021 222 3625. தொலை நகல்:021 -222 5163, மின் அஞ்சல்: (necordjf @sltnet.lk

06. ஒப்பந்த ஆவணங்கள் நவம்பர் மாதம் 08ஆம் திகதிமுதல் நவம்பர் மாதம் 22ஆம் திகதிவரை முற்பகல் 9.30லிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

07. இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் , கேள்வி இடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல்குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி , மற்றும் நேரம்ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்த பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர் , மாவட்ட கேள்விச்சபை, NECORD கச்சேரி, யாழ்ப்பாணத"திற்கு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முன்பாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தக்காரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

**செ. பத்மநாதன்**
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்.**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி.10719)

## இந்தியப் பிரதமர் நெதர்லாந்து பயணம்

(புதுடில்லி)

இந்திய ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று நெதர்லாந்து புறப்பட்டுச் சென் றார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், தொழில் மற்றும் வாணிப அமைச்சர் கமல்நாத் ஆகியோர் அடங்கிய உயர்நிலைக் குழுவொன்றும் பிரதமருடன் சென்றுள்ளது. பயணம் புறப்படும் முன் பிர தமர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஐரோப்பிய யூனியன் உலகில் அரசியல் ரீதியாக செல்வாக்கு மிக்கதாகவும் பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்ததாகவும் உருவாகி வருகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஐரோப்பிய யூனியன் இந்தியாவின் மாபெரும் வர்த்தகக் கூட்டணி மாத்திரமல்ல புதுடில்லியில் மாபெரும் அந்நிய முதலீட்டு ஆதாரமாகவும் விளங்குகின்றதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தாய்லாந்து ஆதரவு

ஐ.நா பாதுகாப்புச்சபையில் இந்தியா நிரந்தர இடம்பெறுவதற்குத் தாய்லாந்து ஆதரவு தெரிவித்துள்ளது. தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் புதுடில்லியில் உலகத்தலைவர்கள் மாநாட்டில் பேசுகையில்;

இந்தியா ஐ.நா பாதுகாப்புச் சபையில் இடம்பெறுவதால் அதற்கு நியாயமான பலதரப்பு அமைப்பு என்ற அந்தஸ்து கிடைக்குமென்று அவர் மேலும் கூறியுள்ளார்.

## மணிப்பூரில் தொடர் தாக்குதல்

இந்தியாவின் வட-கிழக்கு மாநிலமான மணிப்பூரில் தீவிரவாதிகளுக்கெதிரான தாக்குதல்களினை இந்திய இராணுவத்தினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்கள்.

6 ஆயிரம் இராணுவ வீரர்கள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், ஏற்கனவே தீவிரவாதிகளின் பல முகாம்கள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் இந்திய இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் தீவிரவாதிகளின் 100 முகாம்கள் சேதமாக்கப்பட்டதோடு 200 இற்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிவில் அதிகாரிகள் தகவல் தரும்போது மணிப்பூரில் உள்ள தீவிரவாதிகளின் சகல தளங்களும் அழித்து ஒழிக்கப்படும் வரை தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்துள்ளனர்.

## காஷ்மீரில் தாக்குதல்

காஷ்மீர் மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டு தாக்குதல் சம்பவங்களில் தீவிரவாதிகளும் ஒரு இந்திய இராணுவ சிப்பாயும் கொல்லப் பட்டனர்.

இந்திய உள்துறையமைச்சர் சிவராஜ்பட்டேல் காஷ்மீரில் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு அங்கு போய்ச்சேர்ந்த சில மணிநேரத்துக்கு முன்னதாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த மே மாதம் இந்தியாவில் காங்கிரஸ் தலைமையில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அமைச்சர் சிவராஜ்பட்டேல் காஷ்மீருக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

# ஆடுகளம் சரியாக அமைக்கப்படாததே மும்பை டெஸ்ட் தோல்விக்கு காரணம்




ரிக்கி பொண்டிங்

இந்தியாவுடனான கடைசி டெஸ்ட் போட்டியில் தமது அணி தோல்வியடைந்தமைக்கு ஆடுகளம் சரியாக அமையவில்லை என அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் தெரிவித்துள்ளார்.

மிகவும் எளிதான வெற்றியிலக்கான 107 ஓட்டங்களைப் பெற முடியாதவாறு இந்திய வீரர்களின் பந்து வீச்சு எகிறியதும், திடீர் திருப்பமும் ஏற்படக்கூடியவாறு ஆடுகளம் அமைந்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

இப்போட்டி மூன்று நாளைக்குள் முடிவடைந்தமையும், 202 ஓவர்கள் பந்து வீசப்பட்டமையும் என்றுமே நடைபெறாத ஒன்று எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமது அணியில் மைக்கல் கிளார்க் போன்றோரும் அதிக விக்கெட் வீழ்த்தியமையை மறுக்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இங்கிலாந்தின் 'சரே' அணியில் விளையாட சுழற்பந்து வீரர் ஹர்பஜனுக்கு அழைப்பு



இங்கிலாந்து கவுண்டி அணிகளின் ஒன்றான 'சரே'அணிக்கு விளையாட இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அழைப்பு ஹர்பஜன்சிங்கிற்கு விடுக்கப்பட்டுள்ள போதும் இந்திய கிரிக்கெட் அதிகாரிகள் இதுவரை அங்கீகாரம் வழங்கவில்லை.

அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் ஹர்பஜன் சிங் 21 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மும்பாயில் இடம்பெற்ற கடைசி டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன்சிங் 29 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதை தொடர்ந்து இந்திய அணி இப் போட்டியில் எதிர்பாராத வெற்றியைப் பெற்றது.

இவர் 39 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 75 டெஸ்ட் விக்கெட்டுக்களையும் 90 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 116 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

# பவள விழா ஒரு நாள் கிரிக்கெட் போட்டி; 15 பேர் கொண்ட அணியில் முரளி கார்த்திக்



இந்திய கிரிக்கெட் பேரவையின் பவள விழாவை சிறப்பிக்கும் வகையில் இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டியில் கலந்து கொள்ளும்15 பேர் கொண்ட இந்திய அணியில் மும்பை டெஸ்ட் போட்டியில் அவுஸ். அணியை திணறடித்த தமிழகத்தின் சுழற்பந்து வீச்சாளர் முரளி கார்த்திக்கும் இணைக்கப்பட்டுள்ளார்.

இவரை விட அண்மைக்காலமாக துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தவறிய யுவராஜ்சிங்கும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே தமிழகத்தின் சகல துறை வீரர் சிறிதரன் சிறிராம் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டிக்கு காயம் காரணமாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் கலந்து கொள்ள முடியாது போன அணித்தலைவர் கங்குலியே அணித்தலைவராக இருப்பார் எனத் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊக்க மருந்து பரிசோதனையில் குளறுபடி ஹமில்ரனின் பதக்கம் பறிபோகும் வாய்ப்புத் தப்பியது

ஊக்க மருந்து பாவனை பரிசோதனையில் தொடர்ந்து ஏற்பட்ட குளறுபடிகளும் பரிசோதனை சரியாக நடத்தப்படாமையினாலும் எதென்ஸ் ஒலிம்பிக்கில் துவிச்சக்கர வண்டிப் போட்டியில் வென்ற தங்கப்பதக்கத்தை அமெரிக்காவின் ரைலர் ஹமில்ரன் என்ற வீரர் தக்கவைத்துக் கொண்டார்.

எதென்ஸில் நடைபெற்ற முதல் பரிசோதனையில் அவர் ஊக்கமருந்து பாவித்ததாக கூறப்பட்டது எனினும் அவரின் இரத்த மாதிரியை எடுத்து குளிரூட்டப்பட்டதால் செங்குருதித் துணிக்கைகள் சிறு அளவில் காணப்பட்டு விட்டது. எனினும் ஹமில்ரன் தான் ஊக்கமருந்து பாவனையில் ஈடுபடவில்லை என்று தெரிவித்தார். இவருடைய பரிசோதனையில் தவறு இருப்பதை உணர்ந்த ஊக்க மருந்து தடுப்பு முகவர்கள் இவருடைய பதக்கத்தை மீளப்பெறும் நோக்கத்தை கைவிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் பரிசோதனைகள் நடைபெற்று அவர் ஊக்கமருந்து பாவனை செய்தார் என்ற முன்னைய குற்றச் சாட்டை தவறு எனச் சுட்டிக்காட்டியதையடுத்து அவர் தப்பித்து விட்டார்.

யாழ். வை.எம்.சி.எ. நடாத்திய

# உள்ளரங்க கரம் போட்டி வெற்றிபெற்றோர் விபரம்

யாழ்ப்பாணம் வை.எம்.சி.எ விளையாட்டுக்கழகம் நடாத்திய கரம் உள் ளரங்க விளையாட்டுப்போட்டி வை.எம்.சி.எ. மண்டபத்தில் இடம் பெற்றது. இப் போட்டி வயது ரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாகவும் திறந்த போட்டியாகவும் இடம்பெற்றன.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:-

திறந்த போட்டி இரட்டையர் ஆட்டத்தில் எஸ்.சற்குணமூர்த்தி, எஸ்.விமலகாந் அணி 24-12, 25-07 என்ற புள்ளிகளைப்பெற்று சம்பியனாகவும், தி.ஜீவகன், எ.பரமநாதன் அணி 14-12 புள்ளிகளையும் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

14 வயதுப் பிரிவு ஆண்கள் தனிப் போட்டியில் என்.கமலரூபன் 26-00 புள்ளிகளைப்பெற்று சம்பியனாகவும் யு.சிந்துஜன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

16வயதுப் பிரிவு ஆண்கள் தனிப் போட்டியில் என்.சனேந்திரா 21-15 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும், ஆர்.நிதர்சன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

16 வயதுப் பிரிவு ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் என்.சனேந்திரா, கே.சாமிலின் அணியினர் 18-01 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும், பி.கெனத் ஜெனித்திரோ, ரி.ஜெருசன் அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

18 வயதுப் பிரிவு ஆண்கள் தனிப்போட்டியில் என்.யுகேந்திரா 14-10 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனையும், என்.சனேந்திரா இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

18 வயதுப் பிரிவு ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் பி.கஜரூபன் எஸ்.ஜனகன் அணியினர் 22-00 என்ற புள்ளிகளைப் பெற்று சம்பியனாகவும், என்.சனேந்திரா கே.சாமிலன் அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (41)




# தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் நிக்கிபோயேக்கு பதில் றொபின் பீற்றர்சன்

இரண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்வதற்காக இந்தியாவுக்கு சுற்றுலாவை மேற்கொள்ளவுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் இருந்து விலகிக் கொண்ட துணைத் தலைவர் நிக்கிபோயேக்கு பதிலாக நியமிக்கப்பட்ட வேகப்பந்து வீச்சாளர் சால் லாங்வெல்ட் பயிற்சியின் போது காயமடைந்ததால் அவருக்கும் பங்கேற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அவருக்கு பதிலாக சுழற்பந்து வீச்சாளர் றொபின் பீற்றர்சன் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

25 வயதுடைய இவர் இதுவரை நான்கு டெஸ்ட் போட்டியில் விளையாடி 7 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

எதிர்வரும் 11ஆம்திகதி தென்னாபிரிக்க அணி இந்தியா வரவுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டி இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை கான்பூரிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி 28 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர், 2 ஆம் திகதி வரை கொல்கொத்தாவிலும் நடைபெறவுள்ளது.

# சிம்பாப்வே கிரிக்கெட் பேரவை சிம்பாப்வே கிரிக்கெட்டாக பெயர் மாற்றம்

சிம்பாப்வே கிரிக்கெட் பேரவை சிம்பாப்வே கிரிக்கெட் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சில மாதங்களாக இடம்பெற்ற ஆலோசனையின் பின்னரே இந்த புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளதாக சிம்பாப்வே கிரிக்கெட் பேரவை தலைவர் பீற்றர் சின்காக்கா தெரிவித்தார்.


ஹராரே விளையாட்டு அரங்கில் வைத்து இதனை அறிவித்த சின்காக்கா தெரிவு செய்யப்பட்ட புதிய இலட்சினையையும் வெளியிட்டு வைத்தார். சிம்பாப்வேயின் எதிர்கால கிரிக்கெட்துறை எதிர்காலத்தில் எதிர்நோக்கவுள்ள சவால்கள் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

நாட்டின் சகல பகுதிகளிலும் கிரிக்கெட்டை விருத்தி செய்யும் வகையில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக அறுபதாயிரம் டொலர்கள் செலவிடப்படவுள்ளது.

# 25 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி

# கடற்புயல்கள் அணிக்கு 53 ஓட்டவெற்றி



தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்பட்ட கடினப்பந்து கிரிக்கெட் போட்டியில் முல்லைத்தீவு கடற்புயல்கள்அணி 53 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

வளர்ந்து வரும் கிரிக்கெட் அணிகளை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ விளையாட்டுத்துறை யினரால் நடாத்தப்பட்டு வரும் கிரிக்கெட் போட்டி வரிசையில் நேற்று கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் அணிக்கும், முல்லைத்தீவு கடற்புயல்கள் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் கடல்புயல்கள் அணி 53 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய கடற்புயல்கள் அணி 25 ஓவர் நிறைவில் 169 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில சசிதரன் 73 ஓட்டங்களையும், தவேந்திரன் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.



73 ஓட்டங்களைப் பெற்ற சசிதரன்

பதிலுக்கு 170 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய கிளி.மாவட்ட அணி 25 ஓவர் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 53 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

பந்து வீச்சில் வசரிதன், ஜெனகராஜ், முரளி சுமன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கி ஊக்கத்துடன் விளையாட்டில் ஈடுபட்டு வரும் கடற்புயல்கள் அணியினரை தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் வாழ்த்தி பாராட்டையும் தெரிவித்தார்.

(ச)


# விளையாட்டு தரத்தை மேம்படுத்தும் அளவிற்கு குடாநாட்டில் உபகரண வசதிகள் இல்லை

றொகான் ராஜசிங்கம்

யாழ். மாவட்டத்தில்லுள்ள விளையாட்டு வீரவீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்தக் கூடியளவில் விளையாட்டுப்பயிற்சிகளை வழங்குவதற்கு உரிய தளபாட மற்றும் உபகரண வசதிகள் இல்லாது இருப்பதாக யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பதிகாரி றொகான் ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக யாழ். மாவட்டத்தில் உள்ள வீரவீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ள அவர் யாழ். மாவட்டத்தில் உள்ள தமிழ் வீரவீராங்கனைகளினை மேம்படுத்துவது குறித்து அரசாங்கம் பாராமுகமாக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். (33)

சிந்தனைக்கு



இன்றைய உலக ஒழுங்கை பலம் தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 08-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## தேவையானதொன்று!

"என்னைச் சிறையில் அடைத்தால் சிறையில் இருந்து சனாதிபதி சந்திரிகாவின் வரலாற்றுடனேயே திரும்புவேன்" என முன்னாள் சமுர்த்தி அமைச்சரும், தற்போதைய ஐ.தே. கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸநாயக்க அறிவித்துள்ளமை ஒரு வகையில் சனாதிபதி சந்திரிகாவிற்குச் சவால் விடுவது போன்றதே.

எஸ்.பி. திஸநாயக்கவின் அறிவிப்பானது சிறையில் கிடைக்கும் நேரத்தைப்பயன்படுத்தி சனாதிபதி சந்திரிகாவின் வரலாற்றை எழுதுவேன் என்பதாகும். இது ஒரு வகையில் வரவேற்கப்படத் தக்கதொன்றே. ஏனெனில் சனாதிபதியின் வரலாற்றில் பல விடயங்கள் மக்களுக்குத் தெரியாதவையாகவே உள்ளன.

எஸ்.பி. திஸ்நாயக்க சனாதிபதி சந்திரிகாவின் வரலாற்றை எழுதுவதற்கு மிகவும் பொருத்தமானவர். ஏனெனில் அவர் ஒரு காலத்தில் சனாதிபதியுடன் மிக நெருக்கமாக இருந்தவர். அதாவது உள்வீட்டுப் பிள்ளைபோல் இருந்தவர். இந்நிலையில் சனாதிபதியின் அன்றாட நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்ள பெரும் வாய்ப்புக் கிட்டியிருக்கும். ஆகையினால் எஸ்.பி. திஸநாயக்க இதற்குச் சந்திரிகாவின் வரலாற்றை எழுதுவதினால் பல உண்மைகள் வெளிவரக்கூடும் என்பது பொருத்தப்பாடானதே

எஸ்.பி. திஸநாயக்கவை சமுர்த்தி ஊழல் தொடர்பாகக் கைது செய்து சிறையில்அடைப்பதில் வெற்றி சனாதிபதி சந்திரிகா பெறுவாரேயானால் அது ஒரு வகையில் அவர்அரசியல் ரீதியான பழிவாங்கலில் வெற்றி பெற்றதாகவே இருக்க முடியும். இதேவேளை எஸ்.பி. திஸநாயக்க வெளியில் வரமுடியாது போகும் நிலையில் அவர் மீதான குற்றச்சாட்டும் நீதியானதே எனக் கொள்ள வேண்டி வரும்

இதன் பிரகாரம் எஸ்.பி.திஸநாயக்கவை சிறையில் அடைப்பதானது நியாயத்தின்பாற்பட்டதாகக் கொள்ளப்படும். அதாவது மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுதல் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே இருக்கும். ஆனால் மக்களைப் பொறுத்து எஸ்.பி. திஸநாயக்கவை சிறையில் அடைத்தால் "ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்தது" போன்றதாக இருக்கும்.

ஒரு புறத்தில் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டஅரசியல் வாதிக்கும் தண்டனை கிடைக்கப் பெற்றதாக இருக்கும். மறுபுறத்தில் இன்று நாட்டிற்குத் தேவையான ஒருவரின் வாழ்க்கைச் சரித்திரமும் கிடைத்ததாக இருக்கும். இது ஒருவகையில் கிடைத்தற்குரிய தொன்றே ஆகும்.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எஸ்.பி. திஸாநாயக்காவைக் கைது செய்வாரானால் நாட்டிற்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்குவதாகவே இருக்கும். ஏனெனில் இலங்கையின் தற்போதைய வரலாற்றில் சனாதிபதி சந்திரிகாவை புறந்தள்ளி அரசியலில் வரலாற்றினை எவரும் எழுதவோ, பதிவுசெய்யவோ முடியாது. இந்நிலையில் எஸ்.பி.திஸநாயக்கவைக் கைதுசெய்தல், சிறையில் அடைத்தல் மூலம் தேவை ஒன்று நிறைவு செய்யப்படுவதாகின்றது.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் தனிப்பட்ட வாழ்க்கையில் இருந்து அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் எஸ்.பி. திஸாநாயக்கவிற்குத் தெரிந்தவையாக இருப்பதினால் முக்கிய பதிவுகளும், தகவல்களும் புத்தகத்தில் இடம்பெற வாய்ப்புண்டு. இவற்றில் சிலவோ அன்றிப் பலவோ சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குச் சங்கடங்களை ஏற்படுத்துபவையாகச் சில வேளைகளில் இருத்தல் கூடும்.

ஆயினும் எஸ்.பி.திஸநாயக்கவின் ஊழல் மோசடிகள் குறித்த தகவல்கள் வெளிவரும் போது எஸ்.பி.திஸநாயக்கவின் தலைவராக இருந்த சனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்தும் மக்கள் அறியப்படவேண்டியது அவசியமானதே ஆகும். ஆகையினால் எஸ்.பி.திஸநாயக்கவிற்கு இச்சந்தர்ப்பத்தை வழங்குகின்றமை வரவேற்கத்தக்கதேயாகும்.

சனாதிபதி சந்திரிகா எப்பொழுதும் கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல் எறிபவர். எஸ்.பி.திஸநாயக்கா குறித்த விடயமும் அவ்வாறானதேயாகும். உள்வீட்டுக்காரனாக ஒருகாலத்தில் இருந்தவரால் நன்மை விளைவிக்கப்போவதில்லை. மாறாக மறைக்கப்பட்டவையும், மறக்கப்படவேண்டியவையும் வெளிவருவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். சுருக்கமாகக் கூறின் பழைய புற்றைக் கிளறுவது போல.

ஆனால் எஸ்.பி. திஸநாயக்கவுடன் மோதலை வளர்த்துக் கொண்டுள்ள சனாதிபதிக்கு எஸ்.பி.திஸநாயக்க தற்பொழுது சவால் ஒன்றை விட்டுள்ளார். இதனைப் பொருட்படுத்தாது சனாதிபதி சந்திரிகா நடவடிக்கைகள் மேற்கொள்வாரேயானால் சனாதிபதி சந்திரிகாவின் துணிச்சலைப்பாராட்டலாம். ஆனால் அதற்காக சனாதிபதியின் மடியில் கனமில்லை என அது அர்த்தமாகிவிடாது.

# திருமலை சிங்கள முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் சிங்கள முன்பள்ளி சிங்களப் பெற்றோர் நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலைக்கருகே உள்ள மிகுந்துபுரசிங்கள வித்தியாலயத்தில் முன்பள்ளி சிங்கள ஆசிரியர்களை கௌரவித்தனர். அவர்கள் அந்நிகழ்விற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட நிர்வாகிகளை அழைத்தனர். அழைப்பை ஏற்று தமிழர் புனாவாழ்வுக்கழக லண்டன் பிரதிநிதி எஸ்.இராஜகோபால், கிளிநொச்சிப் பிரதிநிதி ஜெகா, திருமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா ஆகியோர் நிகழ்வில் பங்கு பற்றி சிங்கள முன்பள்ளி ஆசிரி யர்கள் 42 பேரை பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் மிகுந்துபுர பொலிஸ் பொறுப்பதிகாரி சமனகுணவர்த்தன ஆண்டான்குளம் விகாராதிபதி இனமுள்தெனியா, பிபுலதிஸ்ஸதேரர் ஆகியோர் பங்குபற்றினர். ஆரம்பத்தில் மிகுந்துபுரசிங்கள வித்தியாலயத்தில் நிகழ்ச்சிகளை சிங்கள முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்களே முன்நின்று நடத்தினர். சிங்கள மொழியில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிய அறிவிப்புகள் சிங்கள தமிழ் மொழிகளிலான உரைகளை நிகழ்வை ஒழுங்கு செய்த சிங்கள ஏற்பாட்டாளர்களே சமகாலத்தில் தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்ப்புச் செய்தனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிங்கள முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் திருமதி சியானி கொத்தலாவல பேசும் போது ஒக்ரோபர் 6 இல் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திய முன்பள்.ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வில் எம்மால் கலந்து கொள்ள முடியாமல் போயிற்று இதனால் வருத்தம் அடைந்த நாம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருமலை அலுவலகத்திற்குச் சென்று முறையிட்டோம். கழக நிர்வாகிகள் அதனை ஏற்று எமக்கு உதவ முன்வந்தார்கள். தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இந்நடவடிக்கை ஒற்றுமையைப் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றார் (25)

# புலிகளுடனான பேச்சுக்களின் போது முஸ்லிம் பிரதிநிதிகளும் பங்கேற்பர்

### -சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் பொழுது முஸ்லிம்களையும் அப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள் வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் போவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறுவதற்காக தேசிய சமாதானப் பேரவைக் கூட்டம கடந்த முதலாம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அக்கூட்டத்தின் போது முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொள்வதைப்பற்றி சனாதிபதி எதுவும் குறிப்பிடவில்லை எனத் தெரிய வருகிறது.

# 2005 வரவு செலவுத் திட்டத்தில் சனாதிபதித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடில்லை

அடுத்த வருடம் சனாதிபதித் தேர்தல் நடத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று நிதி அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. அடுத்த வருடம் சனாதிபதித் தேர்தல் நடக்கும் என பரவலாக நாட்டில் வதந்தி பரவியுள்ளது. ஆனால் தேர்தல் திணைக்கள செயலாளர் நாயகம் இது சம்பந்தமாக எந்த அறிக்கையும் மத்திய திறைசேரிக்கு அனுப்பவில்லை எனத் திறைசேரி கூறியுள்ளது தேர்தல் திணைக்கள நடவடிக்கைகளுக்கு மாத்திரம் நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள பிரதம கணக்காளர் எஸ்.ஏ.எஸ் அபு ஆராச்சி தெரிவித்துள்ளார். ஆகவே 2005ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடைபெறாது 6 ர அரசியல் வட்டாரங்கள் தெரிவ கின்றது.

# விலைவாசியைக் கட்டுப்ப த்தாத வாணிபத்துறை அமைச்சருக்கு எதிர்ப்பு

### -பிரதி அமைச்சர்கள் குழு தீர்மானம்

நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதை வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பொனாண்டேபுள்ளேயால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே இவருக்கெதிராக எதிர்ப்புத் தெரிவித்து செயற்படப் போகிறோம் என பிரதி அமைச்சர்கள் குழுவிற்கு தலைமை தாங்கும் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார். சில பிரதேசங்களில் பொருட்களின் விலைஅதிகரித்திருப்பதாகவும், வேறு பகுதியில் பொருட்களின் விலை குறைந்திருப்பதாகவும் பாவனையாளர்கள் தெரிவித் துள்ளனர். ஆகவே வரவு செலவுத் திட்டத்திற்குமுன்னதாக பொருட்களின் விலை சுறநிலைக்கு கொண்டு வரவேண்டுமென டிரோன் பெரேரா கூறியுள்ளார்.

### -பாவிக்கப்பட்ட வாகனங்களின்-

# இறக்குமதித் தீர்வைக்கு தற்காலிக நீதிமன்றத் தடைவிதிப்பு

நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட பாவிக்கப்பட்ட வாகனங்களின் இறக்குமதி மீதான உத்தேச வரித்திட்ட அமுலாக்கத்தை தடைசெய்யும் தற்காலிக தடை உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

வாகன இறக்குமதி செய்யும் கம்பனி தாக்கல் செய்த மனு விணைப் பரிசீலனை செய்த பினனர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பிரதிவாதிகளான நிதியமைச்சர், திறைசேரி, செயலாளர், சுங்கப் பகுதிப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை அடுத்த மாதம் 19 ஆம்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.மனுதாரர்கள் இந்த வரிமுறை முற்றிலும் நியாயமற்றதென்றும் அதனை அமுல் செய்யும் முறை சட்டவிரோதமானதென்றும் தெரிவித்துள்ளனர்.

# சிறில. கடற்படைக்கு புதிய போக்குவரத்துக்கப்பல்

சிறிலங்கா கடற்படையினரின் போக்குவரத்து தேவைக்காக புதிய கப்பல் ஒன்றை உடனடியாகக் கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் சிறிலங்கா கடற்படையின் உயரதிகாரி வைஸ் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம உட்பட்ட குழுவினர் அவுஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர் புதிதாக கொள்வனவு செய்யப்படப்போகும் கப்பல் சுமார் 500 பேரை ஏற்றிச் செல்லக்கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலாலி வான்படைத்தளம் புனரமைக்கப்பட்ட பின்னர் அதனூடாக படையினரின் வான்வழிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு கப்பலின் மூலமே போககுவரத்து இடம்பெறவுள்ளமையை அடுத்தே புதிய கப்பலின் அவசியம் ஏற்பட்டுள்ளது. (32)

# மன்னார் மீனவர் போராட்டத்திற்கு யாழ். கடற்றொழிலாளர் சங்கம் ஆதரவு

(வடமராட்சி)

மன்னார் கடற்பரப்பினில் மீண்டும் அதிகரித்துள்ள இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளினது நடமாட்டத்தை கட்டுப்படுத்தக்கோரி அப்பகுதி மீனவ சங்கங்கள் மேற்கொண்டுவரும் மறியல் போராட்டத்திற்கு யாழ்.மாவட்ட மீனவ சமாசங்களின் சம்மேளனம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட அவ்வமைப்பின் செயலாளர் க.சூரியகுமாரன் மன்னார் மீனவர்களது போராட்டம் தொடர்பில் உரிய தீர்வை அரசு உடன் வழங்க வேண்டுமென கோரிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வாறில்லாது வழமை போன்று இவ் விவகாரத்தினில் அரசு அசட்டைப் போக்கையே கடைப்பிடிக்குமாயின், அவர்களது போராட்டத்திற்கு ஆதரவாக யாழ். மாவட்ட மீனவ சமூகமும் எதிர்ப்புப் போராட்டங்களில் குதிக்குமெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை சனாதிபதி இந்தியாவில் தற்போது தங்கியுள்ள நிலையில், இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளினது அத்துமீறல்கள் தொடர்பாக உரியதரப்புகளுடன் பேச்சுக்களை நடாத்தித் தீர்வொன்றை கண்டுகொள்ள வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது நீண்டகாலமாக இருதரப்பு மீனவர்களிற்குமிடையே நிலவி வரும் பிணக்கினை முடிவிற்குக் கொண்டுவர உதவுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (28)

# "விழி" மருத்துவ இதழின் பொன் மலர் நேற்று சிறப்புற வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் "விழி" மருத்துவ இதழின் பொன்மலர் வெளியீட்டு நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆ.காண்டீபன் ஏற்றிவைத்தார்.



தலைமையுரையினையடுத்து "விழி" பொன்மலர் இதழ் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. முதற்பிரதியினை நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் வெளியிட்டு வைக்க கிளி.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் துணைவியார் திருமதி சுஜந்தன் பெற்றுக் கொண்டார்.தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை தமிழீழ சுகாதார சேவைகள் இணைப்பாளர் அருண், வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரதினம் ஆகியோர் வழங்கி வைத்ததுடன் கருத்துரைகளும் வழங்கினர்.நன்றியுரையினை கிளிநொச்சி சுகாதார திணைக்கள மருத்துவ மேற்பார்வையாளர் திருமதி லோ.பசுபதிப்பிள்ளை வழங்கினார். (சோ)

# இஸ்லாமிய மதப் பிரிவினரிடையே மதக் கொள்கைப் பிரச்சினைக்குத் தீர்வு

காத்தான்குடி பகுதியில் இஸ்லாமிய மதப்பிரிவினரிடையே கடந்த 25 வருடங்களாக இடம்பெற்று வந்த மதக்கொள்கை பிரச்சினைக்குத் தற்போது சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது.

ஜாமியத்அல் உலமா சபை சார்புடையவர்களுக்கும், அகில இலங்கை இஸ்லாமிய மெஞ்ஞான பேரவையினருக்கும்இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் காத்தான்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு தரப்பிலிருந்தும் தலா 5பேர் கலந்துகொண்டனர். இஸ்லாமிய மெஞ்ஞான பேரவையைச் சேர்ந்த மௌலவியும் கலந்து கொண்டுள்ளார். இதன் போது எடுக்கப்பட்ட இணக்கப்பாடுகளை நேற்று மாலை மக்களுக்கு ஜாமிஅத் உலமா சபையினரால் பள்ளி வாசல் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மௌலவியும் அதனைச் சார்ந்தவர்களும் இஸ்லாமிய சகோதரர்களான மக்கள் அவர்களை முஸ்லிம் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளுமாறு அவ் அறிவித்தலில் கூறப்பட்டது.ஜாமியஅல் உலமா சார்புடையவர்களுக்கும் மெஞ்ஞான சபையினருக்கும் இடையே மதக் கொள்கைகளில் நிலவிய முரண்பாடு கடந்தவாரம் வன்முறைகளாக வெடித்தமை தெரிந்ததே.

-முள்ளிவாய்க்கால் பகுதியில்-

# உந்துருளி -ஈருருளி விபத்தில் காயமடைந்தவர் மரணம்

முள்ளிவாய்க்கால் மேற்குச் சந்தியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த வயோதிபர் நேற்று முன்தினம் மரணமானார். உந்துருளி-ஈருருளி விபத்தில் ஈருருளியைச் செலுத்திவந்து, காயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பூனைப்பட்டி உடப்பைச் சேர்ந்த ராசன் (வயது 60) என்பவரே மரணமானவராவார்.

இச் சம்பவத்தில் உந்துருளி ஓட்டுனரும் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.விபத்து குறித்து முல்லைத்தீவு காவல் பணிமனையினர் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (20)

## தீ....

இதனையடுத்து எரிந்த நிலையில் கடைக்கு வெளியே எடுத்து வரப்பட்டு நீரூற்றி அணைத்து விட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவர் நேற்று முன்தினம் மரணமானார். (20)

# வவு.வடக்கு ஆசிரியர்களுக்கு நாடகப் பயிற்சிப் பட்டறை

(அலுவலகசெய்தியாளர்)

வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரியர்களுக்கான நாடகப்பயிற்சிப் பட்டறை கடந்த 6ஆம் திகதி முதல் கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட கல்விக்கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆ.காண்டீபன் ஏற்றி வைத்தார். அரங்க செயற்பாட்டுக் குழுவின் யாழ். பல்கலைக்கழக நாடக அரங்கியல் விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் மற்றும் செ.விந்தன், கு.மகிழ்ச்சிகரன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். தொடர்ந்து இன்றும் நாளையும் இடம்பெற



நேற்று நடைபெற்ற இரண்டாம் நாள் பயிற்சி நிகழ்வில் மங்கல விளக்கினை வவுனியா மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் எஸ்.ஞானம், போரூட் திட்ட முகாமையாளர் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை வுள்ள மேற்படி பயிற்சி நெறியின் இறுதி நாளான நாளை பிற்பகல் 3.00 மணிக்கு பயிற்சினை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இந்திய...

இதன் காரணமாகவே இந்தப் போராட்டம் செய்கின்றோம் எனவும் மீனவ சங்கங்கள் கூறுகின்றன.

பேசாலை மீனவ சங்கங்களின் தலைமையில் நடைபெறும் இந்த போராட்டத்திற்கு அயல் கிராமத்திலுள்ள மீனவர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். (மி)

## இந்...

மன்னார் நகரப் பிரதேசச் செயலாளர் வரதீஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது மீனவர்கள் தமது உணர்ச்சிகளை மிகவும் ஆத்திரத்துடன் வெளிப்படுத்தினர் முக்கியமாக நேற்று முன்தினம் எமது தாயகக் கடற்பரப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர் மீன்பிடிப் படகுகள் வந்து 400 இலட்சம் பெறுமதியான எமது கடற் செல்வங்களை அள்ளிச்சென்றது. இது ஒரு திட்டமிட்ட சதியாகும். இதற்கு சிறிலங்கா கடற்படையினர் ஆதரவு வழங்கியுள்ளனர். எனவே இனி மேல் எம்மால்பொறுக்கமுடியாது. எமது தாயகக் கடற்பரப்பில் இந்தியப் படகுகள் அத்துமீறி வருதை தடுப்பதற்கு இப் பொறுப்பை எமது விடுதலைப்புலிகளிடம் ஒப்படையுங்கள். அவர்கள் அதை உடனடியாகச் செய்து முடிப்பார்கள் எம்மைப் பொறுத்தவரை புலிகளே எமக்குக் கைகொடுப்பார்கள் ஏக தலைவர் பிரபாகரனே என மக்கள் உரத்துக் கோசமிட்டனர். இதேவேளை அங்கு வந்தவர்கள் தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் இனி இடம்பெறாது என வாக்குறுதியளித்தனர். மக்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் கொட்டும் மழையிலும் மீனவர்களின் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. (மி)

## புலிகளின்...

நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இது தொடர்பாக எங்களுடைய தலைமைப்பீடம் தெளிவான விளக்கத்தை எல்லா மக்களுக்கும் தெளிவாக விளங்கப்படுத்தியுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார்.

-வவுனியா வாரிக்குட்டியூரில்-

# சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட மூவர் பொதுமக்களால் பிடிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மன்னார் வீதியில் 12 கிலோமீற்றர் பகுதியில் உள்ள வாரிகுட்டியூரில் சமூகவிரோத செயல்களில் ஈடுபட்ட பம்பைமடுப் பகுதியைச் சேர்ந்த மூன்று இளஞர்கள் வாரிகுட்டியூர் மக்களால் தாக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டு, வவுனியா அரசியல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். வாரிக்குட்டியூர் பகுதியில் இடம் பெற்ற பல்வேறு களவுச்சம்பவங்களுடனும் கொலை ஒன்றுடனும், கசிப்பு காய்ச்சும் தொழிலிலும் இவர்கள் ஈடுப்பட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த மூன்று நபர்களும்பலகுற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பொலி சாரின் அனுமதியுடன் இவர்கள் கசிப்பு வடிக்கும் நடவடிக்கையில் நீண்ட காலமாக ஈடுப்பட்டு வந்தவர்கள் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர் நேற்று இவர்கள் கோயில் குளம் என்ற மக்கள் நடமாட்டம் இல்லாத சூனியப்பிரதேசத்தில் கசிப்பு காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த போது மக்களால் சுற்றி வளைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆறு கசிப்புப் பரலில் இரண்டு கசிப்புப் பரல்கள் வவுனியா அரசியல் துறை காரியாலயத்தில் வாரிக்குட்டியூர் மக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று பேரும் கத்திகள் பொல்லுகள் சகிதம் அப்பகுதி மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுத்தி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது கைது செய்யப்பட்டவர்கள் பொலிசாரி டம் ஒப்படைக்கப்படவில்லை. இது தொடர்பாக பிரதேசவாசிகளிடம் கேட்ட போது பொலிசாருடன் மேற்படி நபர்களுக்கு தொடர்பு இருப்பதன் காரணமாக பொலிசாரிடம் கொடுக்கும் பட்சத்தில் மேற்படி நபர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாது என்ற காரணத்தாலேயே தாம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்ததாக மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக விடுதலை புலிகளிடம் என்ன செய்ய போகிறீர்கள் என்று கேட்ட போது எந்த விதமான முடிவுகளும் தாம் எடுக்கவில்லை என்றும், மக்களின் வேண்டு கோளுக்கிணங்க தாம் தடுத்து வைத்திருப்பதாகவும்,தமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு இருப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் தி.ஞனவேல் தெரிவித்தார். (21)

## மணி...

தனர். இறுதியாக 1990ஆம் ஆண்டில் இந்தியப் படையினர் முற்றாக நாட்டை விட்டு வெளியேறியபோது 1,700இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்திருந்ததாக அறிவிக்கப்பட்டதுடன், தமது உயிரிழந்த 1,700 இந்தியப் படையினரை கௌரவிக்கும் முகமாக கொழும்பில் மணி மண்டபம் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இம்மணி மண்டபம் அமைக்கும் பணி தொடர்பாக முதன் முதலாக முன்னாள் இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் பலகல்ல இந்தியா சென்றிருந்த போது இந்திய அரசிடம் தெரிவித்திருந்தார். இவரின் இப்பிரேரணையை இந்திய படைத்தரப்பினர் வரவேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இம் மணி மண்டபத்தை அமைப்பதற்கான இடம் குறித்து சிறிலங்கா அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருவதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.